www.padippakam.com

23.2.87

கூவல் IV

விலை 7 KR

படிப்பகம்

www.padippakam.com




நாம் முடுக்கிவிட்ட கடிகாரம் எம்மையே வெருட்டி ஓட்டுவது போல, நாமே வரையறுத்துக் கொண்ட வழக்காறுகள் உதித்த அம் மொட்டைச் சுற்றி மொய்த்தன.

அது பாவம் என்ன செய்யும்?

அழத் தொடங்கியது.

பசியிலும் அழுதது; பயத்திலும் அழுதது.

முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற அது கையில் எடுத்துக் கொண்ட முதல் ஆயுதமே அழுகைதான்.

அதன் சாத்வீகப் போராட்டத்திற்கு மனிதாபிமானமும் பாசமுள்ள பெற்றாரின் பாராளுமன்றமும் தலை வணங்கின.

படிப்பகம்

www.padippakam.com


"-- ஆம்--- நான்-- நானேதான எழுதி வந்திருக்கிறேன்..."
புஞ்சி பண்டா பதட்டப்பட்டார்.

..."படியும்.."

"இந்திரா உயிருடன் இருந்தபோதே
படையை அனுப்பாத இந்தியா இனி
எக்காலத்திலும் இலங்கை மீது படை
-யெடுப்பை நடத்தாது' இதுதான் என்
கணிப்பு"

"ஆஹா!.. தீர்ந்தது என் சந்தேகம். இந்த ஆலோசனைக் குழுவே தீர்த்து வைக்காத பிரச்சனையைத் தனி ஒருவராக வந்து தீர்த்து வைத்த புஞ்சிபண்டாவே!...., நீர் வாழ்க!... எங்கே உம் BANK ACC. NO....

திடீரென எழுந்தார் இந்துக்கலாச்சார பிரதேச அபிவிருத்தி அமைச்சர் இராசதுரை.

"நல்லவேளை தொண்டமான் பேச்சுவார்த்தை என்று இந்தியாவைக் கூட்டிக்காட்டப் போனதால் எனக்கு இந்த வாய்ப்பு.... விடக்கூடாது...." தனக்குள் எண்ணிக் கொண்டார் இராசதுரை.

"இன்று கட்சிக்குள் வந்தவருக்கு இம்மாம் மிடுக்கா...." மனதுள் புகைந்தார் தேவநாயகம்.
முகம் அமாவாசையானது.

"மேன்மை தங்கிய அதியுத்தம ஜனாதிபதி அவர்களே!... சற்றுப் பொறுங்கள்... புஞ்சிபண்டாவே! இங்கே வாரும்."

"வரமாட்டேன்... பாங்கில் இறைப் பண்ணியபின்தான் வருவேன்.

"அதில்தான் சங்கடம் இருக்கின்றது. இப்படி வருகிறீரா?"

புஞ்சி பண்டாவுக்கு அடிவயிற்றைக் கலக்கியது -

"வந்தேன்.... சரி என்ன சங்கடம்?"

"இதை நீர் தானே எழுதி வந்திருக்கிறீர்?"

"பின்னே ---- யாராவது இரவில் வந்து எழுதிக்கொடுத்துவிட்டுப் போவார்களா--- நான் தானே எழுதினேன்?"

"உமது அறிக்கையில் தவறு இருக்கின்றது."

"இருக்கட்டுமே ---- எவ்வளவு பிழைகள் இருக்கின்றனவோ அதற்கு ஏற்றமாதிரி பரிசுத் தொகையைக் குறைத்துக் கொள்ளுங்கள்."

இந்துக் கலாச்சார அமைச்சர் புன்னகைத்தது.

படிப்பகம்

www.padippakam.com



" ஜனாதிபதியும் அமைச்சர் பெருமக்களும் (மனதுள் -- பேக்காய் தெ-வாளிமாரும்) கூடியுள்ள இந்த மண்டபத்தில் பிழையான ஓர் அறிக்கைக்கு எம் ஜனாதிபதி பரிசு வழங்குகிறார் என்றால் அதைக் கண்டு வருத்தப்படும் முதல் மனிதன் நான்தான். அதே சமயம் D.S. சேனாநாயக்காவும் டட்லியும் கட்டிக் காத்து வந்த இந்த U.N.P ஆட்சி-யில் சரியான ஓர் அறிக்கைக்கு எம் ஜனாதிபதி பரிசளிக்கிறார் என்றால் அதைக் கண்டு மகிழ்வதும் அடியேன் தான்."

புஞ்சிபண்டா தொடர்ந்தார்.

"அறிக்கைமூலத்தைப் பெயர் வாங்கு-வோர் இருக்கிறார்கள். பிழை கண்டுபிடித்துப் பெயர் வாங்குவோரும் இருக்கிறார்கள் இதில் நீர் எந்த ரகம் என்று உமக்கே புரியும்."

(--- இதுக்குத்தான் சொல்லுறது ஆமத்துறுவை நம்பக் கூடாது என்று - மனதுள் புறுபுறுத்தார்)

"உம்மை மாதிரி இரண்டு ---- வேண்டாம் நீர் ஒருவரே போதும் ஆட்சி உருப்பட்டாற் போலத்தான். முடிந்தால் ஜனாதிபதியிடம் 'சொல்லுங்கள். நான் வருகிறேன்"

" புஞ்சிபண்டா! புஞ்சி பண்டா!- ----- "

★

புஞ்சி பண்டா வியர்க்க விறுவிறுக்க பேரைன். கோட்டை. ஜந்துவாம்பிட்டிச் சந்தி, கொச்சிக்கடை, பாலத்துறைப் பாலம் ---- அனைத்தையும் "செவ்லிவிட" வேகமாகக் கடந்து வத்தளையில் உள்ள தன் வீட்டில் விழுந்தார். அவமான உணர்ச்சி அவரைப் பிடுங்கித் தின்றது. அதை விடப் பயம் அவரைப் பரலோகத்துக்கு அழைத்தது.

"..... எனக்கு வேணும் --- வேணும் ... ஆசை --- நல்ல வேளை புழ்மாடிக்குக் கொண்டுபோகாமல் விட்டாங்களே. இனி எப்படி நான் பேப்பருக்கு எழுதுவேன் --- முந்தா அரை குறையாக எழுதினேன் --- ஆள் நேசனலிஸ்ற் என்று நம் பிறங்கள் --- இப்ப --- இப்படி தனியே நின்று புலம்பிற அளவுக்குப் பண்ணிட்டாளே! பேய்! (--- மெல்லிய முணகலில்) கூப்பிடக் கூடாது ஆளைக் கூப்பி-டக் கூடாது. வரமாட்டான் --- அவன் வரமாட்டான் --- ஆசை ---- அசை ----

www.padippakam.com


வாசற்கதவு தானாகத் திறந்து மூடிக்கொண்டது.

'புஞ்சி பண்டாவே! பரிசு கிடைத்ததா"?

"ஆம்! உதை ஒன்றுதான் கிடைக்கவில்லை. கொஞ்ச நேரம் நின்றிருந்தால் இந்தியன் எம்பசிக்கு முன்னால் கட்டிக் கம்பத்தில் போட்டிருப்பார்கள்.

"என்ன நடந்தது விளக்கமாகச் சொல்!"

"அம்மா! இதுக் கொன்றும் குறைச்சலில்லை. பேசாப்போ நல்லாய்ப் பேசு அதைல் அறிக்கையை மட்டும் தப்புத்தப்பாய் எழுதிக் கொடு"

"பிழையான் என் அறிக்கையிலா ----- என்ன சொன்னது...."

"உன் பாட்டன் -------- அங்கை ஒருத்தன் கட்சிமாறி வந்திருக்கிறான்"_

"காட்டு அவனை---- புறப்படு என்றான்.

[அடுத்த கூடலில் நிறைவுறும்]

## 50Kr
## பரிசைத் தேடித்தரும் நகைச்சுவை கற்பனைத் திறன் போட்டி!

விபரம்: அண்மையில் இலங்கை, ஜெனீவா மகாநாட்டில் நாளும் அகதிகளை ஏற்கத் தயாராக இருக்கின்றது எனக் கைச்சாத்திட்டுள்ளது. எனவே அங்கு அமைக்கப்படும் அகதிமுகாம், விசாரணைகள், கல்வி முறை, வாழ்க்கை முறை என்பன எவ்வாறு இருக்கும் என்பதை நகைச்சுவையாக உங்கள் கற்பனைக்கு வடிவம் கொடுத்து கதையாகவோ அன்றிக் கவிதை வடிவிலோ அன்றிக் கட்டுரையாகவோ வடித்து எமக்கு அனுப்புங்கள்.

முடிவுத்திகதி: 20-3-87.
முடிவுகள் மார்ச்மாத கூடலிலும், ஆக்கங்கள் ஏப்பிரல் மாத கூடலிலும் வெளியாகும்.

வாசகர்களே!

இம்மாதம் முதல் சஞ்சிகையின் கடைசிப்பக்கம் ஓவியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் '18cm x 12cm' அளவில் வரைந்து அனுப்பவும். இம்மாத ஓவியம் திரு. அ. பாலமனோகரனால் வரையப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



குறுக்கெழுத்துப் போட்டி IV

தொகுப்பு: இராஜசேகரன்



கிடமிருந்து வலம்:

1 ஈழத்து மூத்த தலைவர்களில் ஒருவரான இவரின் நினைவுச்சின்னம் இன்று மலர்வளையம் வைக்க நெருங்கமுடியாத இடத்தில் உள்ளது.

11. இவர்கள் மதவழிபாட்டுடன் நிற்காமல் மதம் கொண்டு அரசியலில் புகுந்ததால் இப்படிக் குழம்பி நிற்கின்றார்கள்.

17 இராம இலக்குமணரைச் சுமந்து கொண்டு பறந்த இவர் இந்தியாவில் மோட்டார் வண்டியாக இப்போ இடம் மாறிக் கொண்டு இருக்கிறார்.

21 "______ எங்கே ______ எங்கே என்று தேடு." – சீர்காழி

28 யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் இது இங்கு குழம்பியுள்ளது

32 ______ பக்தியுடன் கோவிலுக்குச் சென்றவர் பாவாடைத் தாவணிகளைக் கண்டவுடன் இதைப் போலத் திரும்பி நிற்கிறார்.

35 அன்பான அழைப்புக்காக நாம் இப்படி இருக்கின்றது எனப் பொய்யாகவும் சொல்வதுண்டு.

39 அயனின் இறைவிரல் இவ் வியாதி வந்து இதைப் போல் இவர் குழம்பியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

அந்த வெற்றியில் அது முலைசுவைத்துக் கொண்டிருந்தது.
கண்கள் திறந்து கொண்டன.
ஓர் உறவுப்படையே அதன்முன் அணிவகுத்து நின்றது.
ஆம் பாசங்கள் ----- பந்தங்கள் -----
அவை கூட ஒரு வகையில் BLACK MAIL தான்.

## கட்டம் I

★

துடக்கைக் கழிக்க வேண்டும் என்-
றோர் நாளைக் குறித்து ∴ அன்றே சாதிப்பிரிவுகள் மூன்றையும்
தொடக்கி வைத்தனர் எம் பெற்றோர்கள்; ஏன் முடக்கியே
விட்டனர்.

தலைமுடி எடுக்கும் போது ஒரு 'கிளிக்'
தட்சணை கொடுக்கும் போது ஒரு 'கிளிக்.'
பந்திக்குப் பட்டாடை விரிக்கும் போது ஒரு 'கிளிக்.'

படத்தைப் பிடித்துக் கொண்டது ஜசீக்கா மட்டுமல்ல.
அந்த ஜனனமும் தான்.

## கட்டம் II

சமயம்; அது ஓர் விருட்சம்.
அதன் கிளைகளும் விழுதுகளும் ஆயிரமாயிரம்.
ஆனால்
சமய வாதிகளும் சந்தர்ப்ப வாதிகளும்
ஆளுக் கொரு கொப்பை வெட்டித் தாம் ஊன்ற
முயன்றதனால் தாய்மரம் இன்று மொட்டையாகிவிட்டது!

கூறு போடப்பட்ட அந்தச் சமுத்திரம் உப்பளங்களாகி விட்டது!

காலங்காலமாகக் கண்ணை மூடிக் கும்பிட்டதாலோ என்னவோ
கண்ணைத் திறந்து பார்க்க நமக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

என்ன செய்துவிட்டோம்?
புரியாத வினாக்களுக்கு விடை புரியுமுன்பே அறியாத குழந்தை-
யையும் அங்கே கொண்டுபோய் விட்டோம்.

5/=, 2/=, 1/=, 50 சதம் என ---- அதுவும் அர்ச்சனைத் துண்டு-
களுடன் வரிசையில் நிற்கின்றது.

'அரோகரா'

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" - குறள் -

14-2-1987 கூவல் 4

வில்லி பிறண்ட்

18-12-1913 இல் ஜேர்மனியில் பிறந்தார். பதினாறு வயதை அடைந்தபோது அவர் தொழிலாளர் கட்சியில் (GERMAN LABOUR PARTY) ஓர் அங்கத்தவரானார். கூடவே நாசிக் கட்சியையும் (NAZZI) கொம்யூனிஸ்ற் (COMMUN-IST) கட்சியையும் எதிர்த்தார்

1933ம் ஆண்டு ஹிட்லர் பதவிக்கு வந்த பொழுது அவர் நோர்வேக்குத் தப்பி ஓடினார். அப்பொழுது அவருக்கு வயது இருபது. அகதிகளின் நிலைப்பாட்டை (MIN VEJ TIL BERLIN) "பேர்லினுக்கு எனது பயணம்" என்னும் நூலில் அவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

" .... வெகு சீக்கிரத்தில் எனக்குள் நானே உணர்ந்து கொண்டது யாதெனில் நான் நோர்வே நாட்டுக்கடிமையாக மாறக் கூடாது என்பது தான். அப்பொழு தெல்லாம் எனது நாட்டின் கவலைகளிலும் நினைவுகளிலுமே மூழ்கியிருந்தேன். எனது நாட்டுப் பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பதிலும்

படிப்பகம்

www.padippakam.com


நான் என்றுமே வேற்று நாட்டில் இருக்கக் கூடாது என்பதற்கு மிகவும் அவதானமாக இருந்தேன். எனக்குப் பின்னால் இருந்த பொறுப்புக்களை நினையாமல் நான் வாழவில்லை; வாழ முடியவில்லை.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் (OSLO) எம் முகாம் இருந்தது. அங்கிருந்த மக்கள் தம் கடந்தகால நினைவுகளில் மூழ்கியும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளிலும் வாழ்ந்தார்களே தவிர தம்மைச் சுற்றியிருந்த குறுகிய வட்டத்துக்கு வெளியே அவர்கள் எட்டிப் பார்க்கவில்லை. கூடவே... நாளடைவில் அவர்களுக்கிடையில் மனக் கசப்புக்கள் தோன்றலாயின.

மேலும் ஒஸ்லோவில் அவர்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் தலை தூக்கின. இவ்வாறான வேண்டாத பிரச்சனைகள் அவர்களிடையே தோன்றியதையிட்டு நான் மிகவும் கவலையடைந்தேன்.

சிறிய பிரிவுகள் சிதறிச் சிதறிச் சிறிய பிரிவுகளாயின. போர் தொடங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு ஒஸ்திரியாவில் இருந்து வந்த அகதிகள் இரு குழுக்களாகப் பிரிந்து நின்று சண்டை பிடித்துக் கொண்டனர். அப் பிரச்சனையை நன்கு அணுகி அவதானித்தபோது அப் பிரச்சனைக்கான காரணத்தை உணர்ந்து கொண்டேன். ஒரு குழு தம்மைவிட மற்றக் குழு ஒரு சேட் கூடுதலாகப் பெற்றார்கள் என்று சந்தேகப்பட்டமையே அச் சண்டைக்குக் காரணமாக இருந்தது." (MIN VEJ TIL BERLIN - Page 44)

போர் முடிந்தபின் வில்லி பிறண்ட் ஜேர்மனிக்குத் திரும்பி வந்தார். 1957 ம் ஆண்டு பேர்லின் மேயராகவும் 1969 ம் ஆண்டு மேற்கு ஜேர்மன் பிரதமராகவும் பதவியேற்றார்.

★

மேலே நீங்கள் படித்த கட்டுரையை திரு. NILES BORUP என்ற ஆசிரியர் அனுப்பியிருந்தார். FÅBORG இல் இருந்து இதன் மூலப்பிரதியையும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் கூடவே அனுப்பியிருந்தார்.

எம் நிலைப்பாட்டை எமக்கு உணர்த்துவதற்காக அதை அவர் சரித்திர வாயிலாகக் கூறியுள்ளார் - எனக் கிளி நினைக்கின்றாள்.

இந்த டெனிஸ் மகனின் கண்ணோட்டத்தை நாமும் புரிந்துகொள்வோமா?

படிப்பகம்

www.padippakam.com

ஜனாதிபதி மாளிகையின் கிழக்கு புறமாக அமைந்திருந்தது அந்த ஆலோசனைக் கூடம். ஜே. ஆர். மௌனமாக வீற்றிருந்தார்.

தங்களிடம் கூடக் கூறாமல் ஸ்ரீபவாஷினியில் அப்படி ஒரு அறிக்கை வெளியிட்டது பற்றி அத்துலத் முதலி, பிரேமதாசா, காமினி திசாநாயக்கா போன்றோருக்கு மனதுள் ஒரு நெருடல்.... ஆனால் அதை வெளிக்காட்டவில்லை. அவர்களும் தங்கள் மண்டையைக் குடைந்து கொண்டுதான் இருந்தார்கள்.

83ம் ஆண்டு இனக்கலவரத்தை தோற்றுவிப்பதற்குக் கூட அவர்கள் இவ்வாறு மண்டையை உடைக்கவில்லை.

ஜனாதிபதியின் மெய்காப்பாளன் ஒருவன் அங்கு வந்து புஞ்சிபண்டாவின் வருகை பற்றித் தெரிவித்தான்.

"--- அவனைப் பின்னாலச் செக்-அப் பண்ணிப்போட்டுக் கூட்டிவா.--- யாராவது தமிழர்கள் புஞ்சி-பண்டா என்ற பெயரில் வெடிகுண்டுடன் வந்திருப்பார்கள்"

பாதுகாப்பு அமைச்சருக்கேதன் செயல்திறனை ஜனாதிபதி முன் காட்டியதில் ஒரு திருப்தி.

"இதுகளை எனக்குமுன் செய்யுங்கள் ஆனால் ஜெயிலை உடைச்சு அவங்கள் இந்தியா போகும் வரை கோட்டை விட்டுவிடுங்கள்----"

ஜே. ஆர். மனதுள் கறுவினார்.

புஞ்சி பண்டா வெள்ளைக் கோட்-சூட் சகிதம் உள்ளே நுழைந்தார்.

"மொ மஸ்துதி."

என்ன--- என் சந்தேகத்தைத் தீர்த்துவைக்கும் அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறீரா.

படிப்பகம்

42 சுதந்திரப் போராட்டம் நடக்கும் நாடுகளில் இத் தாக்கு-தல்களைச் சமாளிக்க முடியாமல் அரசாங்கங்கள் திக்கு-முக்காடுகின்றன.

47. இதைக் குடித்துக் குழம்புபவர்களைப் பார்த்து இது குழம்-பாமல் சிரிக்கின்றது.

49 கண்ணன் இதைத் தின்று வாய்க்குள் உலகைக் காட்டி-னான் - நாம் இதைத் தின்றால் அப்பென்டிசைட் தான் வரும்.

53 பெற்றோரின் சொற்கேளாமல் கெட்ட சகவாசங்கள் கொண்டி-ருந்தவர் ஒன்றுக்கும் பயன்படாத ——— கரையானார்.

57. நாம் தினமும் விடிந்தவுடன் இதனை எதிர்பார்த்து வாங்குவது-ண்டு. உங்கள் விடைகளையும் இதன் மூலம் விரைவாக எதிர்பார்க்கின்றோம்

மேலிருந்து கீழ்:

1. ஒருத்தியை இது கடித்துக் கொண்டிருந்த பொழுது இதுவரை யாருக்கோ அடித்த அடியில் இது குழம்பி விட்டது.

3. இந் நாட்டில் உழைப்பவர்களின் இதில் தான் அகதியாய் வந்த நாம் சொகுசாக இருக்கின்றோம்.

4. கல்லில் இருந்து இதனை உரிப்பது போல் சில முடியாத செய-ல்களை வர்ணிப்பதுண்டு.

5. இங்கு கொடி நாட்டுவதிலும் மனிதருக்குள் போட்டி நடக்கின்றது இங்கு இது குழம்பியுள்ளது

6. அன்பு உபசரணையால் இராமனின் தம்பியான இவன் பரதனின் வருகை கண்டு குழம்பி நிற்கின்றான்.

7. தமிழர்களின் நியாயமான போராட்டத்தை இது எவ்வாறும் அரசாங்கத்தைப் பார்த்து இது இங்கே குழம்பிவிட்டது.

16. இப் பழத்திற்காக முருகன் மயிலில் FLY பண்ணினார்.

28. தனது சத்தம் கேட்டு சனம் சரியில்லை எனக் குழம்பும் மனி-தர்களை எண்ணி இது குழம்பி நிற்கின்றது.

42 குடும்ப வாழ்க்கையில் அமைதி கிடைக்காவிட்டால் இதனையும் தூக்கிக் கொண்டு காசி யாத்திரை செல்பவர்கள் உண்டு.

45 தெருவைக் கவனியாது வேறு எதையோ பார்த்த வண்ணம் சயிக்கிளில் ——— வந்தவர் அடிபட்டு இதைப்போல் நசுங்கிப்போய் விழுந்தார்.

www.padippakam.com

## குறுக்கெழுத்துப் போட்டி 3 இன் விடைகள்:

இடமிருந்து வலம்: ① பதம் ⑧ விழும் ⑫ பட்டி ⑮ தம்பட்டம் ㉒ யாழ்ப்பாணம் ㉚ கலகம் ㊳ கம்மாளம் ㊹ லேவா ㊼ விகடன்

மேலிருந்து கீழ்: ① பந்தயம். ② தவம் ⑤ விட்டம் ⑦ பம் ⑰ பயம் / பணம் ㉚ கலவ ㉓ பாவகன் ㉜ கட்டணம் ㊽ கனவு ㉘ வரம்.

சரியான விடைகளை அனுப்பியவர்:

உதயன், ÅLBORG

சிவா. ப. ÅLBORG, T. தேசபேன் NÆSTVED, Q. பிரான்சிஸ், HELSINGER

பாலச்சந்திரன், HELSINGER.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: உதயன் ÅLBORG.

★

அன்பான வாசகர்களே!

குறுக்கெழுத்துப் போட்டிக்காக சஞ்சிகையை வெட்டி அனுப்புகிறீர்களே! என் சிறகுகளை இப்படி வெட்டுவது நியாயமாகுமா -

இப்படிக்கு
உங்கள் குயிலி.

# "வெண்கொடி"

(சரித்திர V.D.O. படம்)

வெளியீடு: ஈழத் தமிழர் கலையரங்கம்.

கூட்டாக வெற்றிகண்ட இக் கலைப் பிரசவத்துக்கு குயிலியும் வாழ்த்தைக் கொடுக்கின்றாள்; கூடவே பாராட்டுகிறாள்.

இலவச V.D.O. பிரதிகளைப் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: K. SELVADURAI
ENGENS KVARTER - 68
7400 HERNING

படிப்பகம்

www.padippakam.com


அ. பாலமனோகரனின்

அட்டைப் படக் கவிதை

ஆழியின் அடியிலும் உலகமொன்றுண்டு
அறிவீர் நீரும் அற்புதந் தன்னை
அங்கு வளரும் மரஞ்செடி கொடிகள்
இங்குமங்கும் நீரின் இசைவுக்கு
அசைந்து ஆடும்! அற்புதம் காட்டும்!
அவற்றினூடே அழகிய மீன்கள்
பறவைகள் போலப் பற்பல நிறங்களில்
கிளைகளினூடே களித்து நீந்தும்!

நீலக் கடலின் நிலமதன் படுக்கையில்
சாலச் சிறந்த கோமகன் கோட்டை.
நீரோட்டம் தன்னில் திறந்து மூடும்.
நித்திலம் வைத்த சிற்பிக் கூரை!
பவளச் சுவர்கள்! பளிங்குச் சாளரங்கள்!
தங்க மீன்கள் வாழும் கோட்டையில்
சிங்கமன்ன ராஜன் வாழ்ந்தனன்.

இல்லாளை இழந்த மன்னவன் தனக்கு
சொல்லால் இயம்பவொண்ணாச் சுந்தரம்
நிறைந்த புதல்வியர் அறுவர்.
குறைகளின்றி அவர்களை வளர்த்த
ராஜமாதா அன்னவன் அன்னை.
ஆறு பெண்களும் அற்புத அழகிகள்!
ஆயினும் அழகி அறுவருள் அவளே!

சிற்றிடை கீழே மீனுடல் படைத்த
சிற்பமன்ன சித்திரக் கன்னி!
ரோஜா மலராம் மெல்லிய மேனி!
ராஜா மகளே அழகின் சிகரம்!
மீனாய் நீண்ட கருநீலக் கண்கள்
தேனாய் இனிக்கும் தெய்வீகக் குரலும்
கொண்ட கன்னி பத்தே வயதினள்.

படிப்பகம்

www.padippakam.com


கோட்டையின் வெளியே கடற்பூங்காவில்
கருநீல மரங்கள்! செந்நிற மலர்கள்!
தண்டும் தாமும் தள்ளாடுவதனால்
தீச் சுடர் போலத் தோன்றியாடும்.
நீரோட்டமில்லா நேரந் தன்னில்
நீலச் சூரியன் உலாதாப் பூவாய்
கோலங் காட்டி உயரே ஒளிர்வான்..

நீலக் குருமணல் நிலவிய தரையில்
கன்னியர் தமக்கித் தனியாய் அமைந்த
சின்னச் சின்ன மலர்க்காவுண்டு.
திமிங்கில உருவில் கடற்கன்னி வடிவில்
அமைத்தனர் மற்றவர்; ஆனால் இவளோ
ஆதவன் வடிவில் வட்டமாய்ச் சமைத்த
ஆங்கவற் கோர் சிலை நாட்டி வைத்தாள்.

சந்ததம் சிந்தனை தன்னில் மூழ்கும்
விந்தைக் குழந்தை சின்னவள் கிளாரின்
செம்மலர் சிந்தும் சிறிய பூங்காவில்
அன்னவள் தனக்கு ஓர்நாள் கிடைத்த
மன்மகன் ஒத்த வாலிபன் சிலைதனைக்
கன்னிதன் கண்ணின் மணியெனக் கருதி
பின்னினள் நெஞ்சில் பேதைப் பருவத்தே

மச்ச கன்னியின் மனதில் முகிழ்ந்த
இச்சை தன்னின் இயல்பால் அவளும்
மேலே வாழும் மனிதரைப் பற்றி
மேலும் மேலும் அறிய விழைந்தாள்
பச்சை வனங்கள்! பாடும் பறவைகள்!
பூக்கள் வீசும் புதின மணங்கள்
இத்தனை கேட்டும் அடங்கா அவள் மனம்.

படிப்பகம்

www.padippakam.com


மச்ச கன்னியர் மரபு வழிப்படி
பத்தும் ஐந்தும் நிறையும் நாளில்
நீயும் கூட மேலே போகலாம்.
நிலவில் தனியே பாறையில் அமர்ந்து
நிலத்தின் மேலே மானுடர் வாழும்
கோலம் காணக் காலம் வரும்.
காத்திரு பெத்தி! என்றாள் பாட்டி.

அடுத்த வருடந்தான் மூத்தவள் செல்வாள்
ஐந்து ஆண்டுகள் எப்படிப் பொறுப்பேன்
என்று துடித்தவள் இரவில் எழுவாள்
நின்று தனியே மேலே பார்ப்பாள்.
கலங்கள் செல்கையில் கருநிழல் தெரியும்
கைகளை நீட்டுவாள் காலினை நினைப்பாள்.

மூத்தவள் சென்று வந்தாள்;
வந்தவள் நூறு சொன்னாள்:
கோபுர வாசல் தோறும்
தீபங்கள் ஒளிரும் காட்சி!
ஆலய மணிகள் ஆர்க்கும்
அற்புத நாத வெள்ளம்!
மீனவள் கேட்ட போது
மானுடம் போற்றி நின்றாள். (தொடரும்...)

படிப்பகம்

www.padippakam.com



நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட முல்லையூரானை வரவேற்பதிலும் அவரின் 'சமர்கால மலர்களை' உங்கள் முன் சமர்ப்பிப்பதிலும் இயிலி பெருமையடைகின்றாள்.

சமர்கால



மலர்கள்

சற்று நில்லுங்கள்!

நாளை ஒருத்தி கற்பழிக்கப்படலாம். ஒரு ஸ்ரீலங்கன் மூன்று மாதமோ மூன்று வருடமோ சிறையிருக்க நேரிடலாம்! "நாங்கள் எல்லோரும் இருக்க இவன் எப்படிக் கற்பழிக்கலாம். நாமெல்லாம் ஆண்மையில்லாதவர்களா?" என்று வரிந்து கட்டிக் கொண்டு ஆண்குலம் சண்டைக்கு வரும். பெண்குலம் வழமை போல வாய் பொத்திக் கொள்ளும். ஏதோ நாட்கணக்காக நாகரீகத்தோடு ஒன்றியே வளர்ந்துவிட்ட மனித ஜாதி என்று எல்லோரும் அவனை வைவார்கள். ஆனால் அவனது மனதுக்குள்ளும் ஏதோ ஒரு நியாயமிருக்கும். அவனது உணர்வுகளை நான் மதிக்கிறேன்.

— முல்லையூரான் —

ஏனென்றால்,

ஒரு நாள் — அன்றைக்குத்தான் அவன் டென்மார்க்குக்கு வந்திருக்கிறான். ஏன்? இலங்கையை விட்டே! ஒரு வெளிநாட்டுப் பயணத்துக்கான முதல் நாடு டென்மார்க் தான். அவனுக்குப் பெயர் ஏதோ ஒன்று. கந்தசாமி, காந்தன், ரகு, சிவா அதுபோல அவனுக்கும் ஒரு பெயருண்டு. ஆனால் விமானத்தில் இருந்தே சக அகதிகளின் செல்லப் பெயராக 'பாஸ்போட்' என்றாகி விட்டது.

www.padippakam.com


இப்பொழுதும் எல்லோரும் அவனைப் பாஸ்போட், பாஸ்போட் என்றுதான் அழைத்தார்கள். அதிலொன்றும் அவனுக்கு வெட்கமில்லை. ஏனென்றால், பதினைந்து வயதுப் பையனாக இருந்தும், கட்டையான உருவம் கொண்டவனாகவும் கறுப்பாக இருந்ததனாலும் அவனுக்கு எல்லோரும் சேர்ந்து 'பாஸ்போட்' என்ற பட்டப் பெயரைச் சூட்டியிருந்தனர். பாஸ்ப் போட்டுக்கு மேல கட்டிலில் தான் படுக்கை கீழேயும் பக்கங்களிலுமாக ஸ்ரீலங்காவின் அகதிப் பரிசுகள் பலர் இருந்தனர்.

பாஸ்போட் போர்வையை விலக்கிக் கொண்டு வெளியே பார்த்தான். சமர் காலம் என்பதனால் சூரியன் நன்றாக எறித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் நாட்டையும், வீட்டையும், உறவுகளையும் தூரத்தே தொலைத்துவிட்டு வந்துவிட்ட அகதிகளின் மனங்களைப் போல வானம் 'அம்' என்றிருந்தது. இலங்கையை விட்டு வெளிப்படும் போது ஏற்கனவே டென்மார்க்குக்கு வந்த பலருக்கும் தான் வருகின்ற செய்தியைத் தெரிவித்திருந்தானெனினும் யாரும் அவனைப் பார்க்க வரவில்லை. என்ன பிரதம மந்திரியா வந்திருக்கிறார். ஒரு அகதிதானே.

பாஸ்போட்டுக்கு எங்காவது திரிவது என்றால் அலாதிப் பிரியம். ஸ்ரீலங்காப் பாஸ்போட்டும் எத்தனை உருவங்களை, எத்தனை பிறவிகளை எடுத்து எத்தனை இமிக்கிரேசன் மதில்களை உடைத்துத் தாண்டிச் சுற்றித்திரிந்திருக்கும்; சுற்றியும் வருகின்றது. அதுபோல் இந்தப் பாஸ்போட்டுக்கும் சுற்றித் திரிவதில் அலாதி இன்பம். இலங்கையில் ஆமிக் காம்புக்கு முன்றேட்டால் கூட இந்தப் பாஸ்ப்போட்டால் போக முடியுமென்றால் பாருங்களேன். அவ்வளவு சிட்டுக் குருவி.

அதுவும் புதிய ஒரு நாட்டுக்கு வந்துவிட்டு அதைச் சுற்றிப் பார்க்காமல் சுருண்டு படுப்பதாவது. பாஸ்போட் வெளிக்கிட்டு விட்டார். காலைக் கடிக்கும் ஒரு சப்பாத்து, நீளக் காற்சட்டை (அவருக்கு மட்டும் அது நீளக் காற்சட்டை மற்றவர்களுக்கு அது கட்டைக் காற்சட்டை) சேட், அதற்கு மேல் ஒரு சுவெற்றர் -- காசைச் சரிபார்த்துக் கொண்டு ஊர் பார்க்கப் புறப்பட்டு விட்டார்.

எங்காவது ஒரு குறிப்பிட்ட இடத்துக்குச் செல்ல வேண்டுமென்று புறப்படுகின்ற பயணிகள்தான் புகையிரதத்துக்கோ பஸ்சுக்கோ காவலிருக்க வேண்டி வரும். ஆனால் பாஸ்போட் ஊர் பார்க்கத் தானே புறப்பட்டுள்ளார். காவலிருக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. பாருங்கள் எவ்வளவு இலகு மனதுக்கு — ஒரு புகையிரதத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டார். புகையிரதம் பஞ்சு பறப்பதுபோல புறப்பட்டு விட்டது. பாஸ் போட்டினுடைய மனதுக்கு இதமாக இருந்தது. கடுடா புகையிரதத்தில் பயணம் செய்து பழகிப்

படிப்பகம்

www.padippakam.com


போன இவருக்கு இதமாக இந்தப் பயணம் இருந்தது. அதை விட-வும் எதிர்பார்ப்பு எதுவுமின்றியல்லவா பயணம் செய்கிறார். அது ஒரு பெரிய சுகத்தைக் கொடுத்தது. இப்படித்தான் ஒவ்வொருவ-ரும் வாழ்க்கையில் ஆசை, பேராசை, எதிர்பார்ப்பு எதுவுமின்றி வாழ்ந்தால் வாழ முடிந்தால் இந்தப் பாஸ்போட்டினுடைய பயணம் போல வாழ்க்கை பெரிய சுகமாக அமையும் -

பாஸ்போட் நினைத்த நேரத்தில் எங்கேயாவது புகையிரதம் நிற்கும் இடத்தில் இறங்கிவிடலாம் ஏனென்றால் அவர்தான் எங்கேயும் போகவில்லையே - ஆறுதலாய் போய்க் கொண்டு இருக்கின்றார்.

புகையிரதக் கண்ணாடிக்கு வெளியே பார்வையைப் புதைத்துக் கொண்டிருந்தார். மரமெ-ல்லாம் பூக்கள் -- மஞ்சள், வெள்ளை, நீலம் - - - என நிறம் சொல்ல முடியாமல் பூக்கள். வழியாகத்தான் இருந்தது தனது பெரிய கண்களை விரித்து விரித்து ரசித்தபடியே இரு-ந்தான். அப்பொழுது தான் புகையிரதம் அந்த இடத்தில் நின்-றது. சிலர் இறங்கினார்கள். சிலர் ஏறினார்கள். ஏறியவர்களுள் ஒரு டெனிஸ் காதல் சோடி ஏறியது. இருவரும் ஒருவரை ஒருவர் இடையில் அணைத்தபடி உள்ளே ஏறி வந்து பாஸ்போட் இருந்த சீற்றுக்கு முன்னால் இருந்தனர். அந்தக் காதல் சோடு வந்த முறையில் பாஸ்போட்டுக்கு ஒரு மாதிரியாக இருந்திருக்க வேண்-டும். நிமிர்ந்து உட்கார்ந்தபடி அவர்களையே பார்த்துக் கொண்-டார். புகையிரதம் புறப்பட்டு விட்டது.

சே! அவன் எதிர்பார்க்கவேயில்லை திடீரென "ச், ச், ச்!".... முத்தங்கள் பொழிந்தன. சிறுவயதில் அறை-ந்த போது பேசப்பட்ட அவஸ்தையைவிட கொடூரமாக அது பாஸ்போட்டைத் தாக்கிவிட்டது. கூழ் குடித்துக் கொண்டிருந்தவ-னுக்குப் பிரக்கடித்தது போலவும் இருந்தது. கை லேசாக நடுங்-கியது. சீற்றோடு கையை இறுக்கிக் கொண்டான். கண்ணாடிக்-குள்ளால் வெளியே பார்ப்பது போல காதல் சோடிகளையும் ஓரக் கண்ணால் பார்த்தபடி இருந்தானா? - இல்லை - எரிந்தான். தொடர்ந்தும் "ச், ச், ச்--!" சத்தமில்லாத முத்தங்கள். உதடுகள் இணைந்தன. ஒரு அர்த்தத்தோடு இறுகிப் பிரிந்தனர். இப்போது பாஸ்போட்டினால் சும்மா இருக்க முடியவில்லை. கைகளை இரண்டு கால்களுக்கும் இடையே வைத்து இறுக்கிக் கொண்டான். இதயத்தை மெல்லிய இரும்பு நாரினால் அறுப்பது போன்ற உணர்வு. அவனுடைய பெரிய விழிகள் துடிதுடித்தன. நெஞ்சு கனத்தது - மழை பொழியப் போகும் வானம் போல மனம் இருண்டு ஒருவித அந்தர உணர்வு. அந்தர உணர்வுக்-குள்ளும் ஏதோ ஒரு சுகம். ஒரு அந்தரம் அவனை ஆட்கொண்டது

படிப்பகம்

www.padippakam.com


பாஸ்போட்டுக்கு இது எல்லாம் ஒரு புதிய வாழ்க்கை. புத்தம் புதிய வாழ்க்கை. அவன் பிறந்து, வளர்ந்து, அனுபவித்துத் திரிந்த சொந்த நாட்டுச் சூழ்நிலை வேறு. அவன் இப்போது வாழ விடப்பட்டுள்ள நாட்டுச் சூழ்நிலை வேறு. சூழ்நிலைகளின் தாக்கம் பாஸ்போட்டுக்கு ஏற்பட்டுள்ளது. எதுவாயினும் ஒரு மனிதனை சூழல் உருவாக்குகிறது என்பதை நாம் விதிவிலக்காக்கி அந்த மனிதனின் சொரூபத்தை நாம் அறியவே முடியாது.

இலங்கையில் முத்தமிட்டுத் திரியும் காதலர்களையோ அன்றேல் பகிரங்க திறந்த வெளி வாழ்க்கை நடாத்தும் மனிதர் இருவரையோ பார்க்காத கண்கள் --- இப்பொழுது திடீர் என்று ஒரு பகிரங்க மைதானத்தில் வைத்துக் கண்களை நன்கு மூடிக் கட்டியிருந்த கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டுள்ளன. இதற்குள் இந்தப் 14 வயதுக் கண்கள் உருண்டு புரள்கின்றன. வெளியே தவறி விழக்கூடிய ஒரு நிலை.

'எங்கே போகின்றோம்?' என்ற ஒருவித எதிர்பார்ப்புமின்றிப் பயணம் செய்துகொண்டிருந்த பாஸ்போட்டுக்குத் திடீரென ஓர் எதிர்பார்ப்பும் ஆசையும் எழுந்து விட்டது. இப்பொழுது தான் முன்பிருந்து அவன் அனுபவித்த அமைதிப்பயணத்தின் சுகம் இழக்கத் தொடங்கியது. தனது இருக்கைக்கு முன்பு உட்கார்ந்திருக்கும் இந்தக் காதல் சோடிகளைப் பின் தொடர்வது எனப் பாஸ்போட் முடிவு செய்து விட்டார்.

ஓடிக் கொண்டிருந்த புகையிரதம் தனது வேகத்தைக் குறைத்து ஒரு தரிப்பிடத்தில் நின்று கதவுகளைத் திறந்து கொண்டது. காதல் சோடிகள் கை கோர்த்து இணைந்தன. பாஸ்போட்டும் கீழே இறங்கிக் கொண்டான். காதல் சோடி விரைந்து நடக்கத் தொடங்கியது. பாஸ் போட்டும் பின்னால் விரைந்தார். அந்த இடம் எது என்றே அவருக்குத் தெரியாது. ஏனென்றால் பார்க்க நேரமில்லை. தலைகால் புரியாத ஓர் அவசரம். தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தார் பாஸ்போட். பின் தொடரும் அச் சோடிகள் ஒரு சமிஞ்சை விளக்குக்காகக் காத்து நின்றனர். அவர்களுக்குத் தான் அவர்களைப் பின் தொடர்கின்ற விடயம் தெரியக் கூடாது என்பதற்காகச் சற்றுத் தூரத்திலேயே பாஸ் போட் வந்து கொண்டிருந்தார். திடீரெனப் பச்சை விளக்கு எரிந்து வழி விட்டதும் சோடிகள் பாதை மாறின. தானும் பாதையைத் தாண்டிவிடலாம் என்ற அவசரத்தில் பாஸ்போட் வந்து கொண்டிருந்தார். ஆனால் அவர் வருவதற்குள் சிவப்பு விளக்கு எரியத் தொடங்கியது.

பாஸ்போட்டுக்குத் தர்ம சங்கடமாகப் போய்விட்டது. என்ன செய்வது? காதல் சோடிகள்

படிப்பகம்

www.padippakam.com





எங்கோ கண்ணிலிருந்து மறைந்து விட்டனர். சிவப்பு விளக்குப் பின்னால் கண்ணை எறிந்து தேடினார் கிடைக்கவில்லை. மனம் ஒரு மாதிரியாகப் போய்விட்டது. எம். ஜி. ஆரின் புதுப்படம் பார்க்கச் சென்று டிக்கற் கிடைக்காமல் வீடு திரும்புவது போன்ற உணர்வு —

மனதைச் சற்றுத் தேற்றிக் கொண்டு பச்சை விளக்கெரியப் பாதை மாறினார் பாஸ்போட். அவர்களைத் தேடுதலை மறந்தார். 'தேடுதல்' இல்லாத ஒரு சுகப் பயணம் மீண்டும் தொடர்ந்தது. வலமிடமாகக் கண்ணை விரித்து, அழகை ரசித்து நடந்து கொண்டிருந்தார் பாஸ்போட்.

நிலமெல்லாம் அழகாக இருந்தது சுத்தமான வீடுகள்; வீதிகளும் தான். நடந்து கொண்டிருந்தவருக்கு ஒரு பெரிய பசிய புல்வெளி கண்ணில் பட்டது. மரங்களும் இலைகளும் நிறைந்து — அழகாகச் சலூனில் தலைமுடி வெட்டியது போல புற்களும் ஒழுங்காக வெட்டப்பட்டு, அதில் மரத்தினால் இருக்கைகளும் இடப்பட்டு அழகான ஒரு இடமாக இருந்தது. பாஸ்போட்டுக்குக் காற்றாற வேண்டிய தேவை ஒரு புறமும் மற்றும் அந்தப் புற்தரையில் அமைக்கப்பட்டுள்ள இலைகளைப் பார்க்க வேண்டிய ஆர்வம் மறுபுறமாகவும் இருந்தது.

மெதுவாகப் புற்தரைக்குச் சென்று விட்டார். போட்டிருந்த சப்பாத்துக்குள்ளாலேயே பாதம் வரை புற்களின் சுகம் தெரிந்தது. புற்தரையில் ஒரு இலையின் அருகில் உட்கார்ந்து கொண்டார்.

குளிக்கப் போகும் முன்போ அல்லது குளித்து ஆடை மாற்ற முன்போ உள்ள ஒரு பெண்ணின் உருவத்தைச் சிலையாகச் செதுக்கி இருந்தார்கள். வெளிப்படையாகச் சொன்னால் அம்மணம். பாஸ்போட் வைத்த கண் திருப்பாமல் பார்த்துக் கொண்டிருந்தார். இப்போது தரை நின்று நாம் நோக்கினால் இரண்டு சிலைகள் நிற்பது போல இருக்கும். ஆனால் ஒரு சிலை ஆடையணிந்திருக்கும். ஏனென்றால் பாஸ்போட் ஆடை உடுத்திருக்கின்றாரே

ஆண்: நான் உன்னைக் காதலிக்கிறேன். FORDI---
பெண்: போடா----

புகையிலை வாங்கக் கடைக்குப் போனவருக்குச் சுருட்டே கிடைத்த மாதிரி. சோகங்களைத் துரத்தித்

படிப்பகம்

www.padippakam.com


திரிந்த ஏமாற்றத்துக்கு அதைவிட ஒரு கண்கிளர்ச்சி கிடைத்த உணர்வு. அவர்களைத் தொலைத்த ஏமாற்றம் தொலைந்தது. சுற்றுமுற்றும் பார்த்து விட்டுச் சிலையைத் தடவிப் பார்த்தார். தனிமையிலே ஒரு பெண்ணைத் தொடுவது போன்ற அச்சம், கூச்சம் எல்லாம் கலந்து பாஸ்போட்டைக் கிழித்தது.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலிலும் இப்படியாக ஆடை தொலைந்த சிலைகளை அவர் கண்டிருந்தார். கோவிலுக்குள்ளே ஏதோ ஒரு பயபக்தியினால் அடக்கப்பட்டிருந்த உணர்வுகள் இங்கே — இந்தப் புற்தரையில் உருண்டன.

புற்தரையைச் சுற்றிப் பார்த்தபடியே அடுத்த வீதிக்குள் மாறுவதற்குள் பக்கத்துப் புதர் மறைவில் 'அவை' கண்ணில் தெரிந்து விட்டன. மிக அண்மையில் போய் நின்று பார்த்தார் பாஸ்போட். காற்சட்டையும், இரண்டு சேட்டும், ஒரு பாவாடை, (இன்னும் பெயர் சொல்ல மனமில்லாத பல---) ஒரு மரத்தின் அடியில் அவசரத்தில் எறியப்பட்ட தோரணையில் கிடந்தன. இந்தப் புதரினை ஊடறுத்துக் கொண்டு ஒரு காலடிப் பாதையும் சென்றது பாஸ் போட்டுக்கு விளங்கிவிட்டது. என்றாலும் சந்தேகத்துள் ஒரு சந்தேகம். ஒரு வேளை ----: குளிக்கினமோ---? சீ! ---குளிக்கிற ஆட்கள் என்றால் உடுப்பை மடிச்சுக் கிடிச்சு வைச்சிருப்பினம் --- இப்படியா போடுவினம்?-- C.I.D. மூளை சொல்லியது.

## விடுதலையும் நாமும்

ஆயுதங்கள் ஆர்ப்பரித்தன!
ஆழமான தம் பாஷையில்!

ஆயுதங்களின் சொற்கள்!
நீதியின் வரிகள்!

அடிமை விலங்குடைக்க
ஆயுத மேந்துவது
அநீதியின் வடிவமல்ல
நீதியின் மொத்த உருவம்.

சுதந்திரம் எம்வாழ்வில்
சூன்யமாகவும் ----
விடிவு எம் வாழ்வில்
விடியாமலும் -----
உரிமை எம் வாழ்வில்
ஊழலாகவும் -----
மூன்றும் எம் வாழ்வில்
முடங்கிக் கிடப்பவை.

காலம் மாறும் தருணம்
கருத்தின் நிலை மாறும்
வேதத்தின் உருமாறும்

— விஜி —
NAESTVED.

## மரணம்

இவ்வுலகில்
மானிடராய்ப்
பிறந்து விட்ட
இறத்தற்காக
நிகழும்
திகதி குறிப்பிடாத
சடங்கு -

அன்பன். அலோசியஸ்
- HERNING -

படிப்பகம்

www.padippakam.com


அடுக்கடுக்காக மலர்கள் மலர்ந்து இருந்தது போலவும் ஆயிரம் தடவை நீரில் முத்துக் குளித்தது போலவும் ஆனால் பாஸ்போட் நல்ல படம் பார்க்கப் போய் HOUSE-FULL பலகையைப் பார்ப்பது போல, அந்தரத்தோ-டு கூடிய ஒரு ஏமாற்றத்தையும் உணர்ந்தார் விடுதிக்குத் திரும்பி விடலாமென மனம் நினைத்தாலும் கால்களும் கண்களும் கடற்கரைப் பகுதியில் தையல் ஊசி தொலைத்தவனைப் போல அதையே தேடின

இப்பொழுது அவனது இதயத்தால் தாங்கவே முடியவில்லை, 'இதயவலி' அனுபவித்துக் கொண்டிருந்தார்

அந்தப் புதருக்குள் இருந்து 'ம்' என்ற முனகலாவது வராதா எனக் காதுகள் தவமிருந்தன.

இனி முடியவே முடியாது! எப்படிப் பார்த்துவிட வேண்டும் என நினைத்தாலும் பயமாக இருந்தது பாஸ்போட்டுக்கு.

என்ன செய்வது ---- பெரிதாக ஒரு பெருமூச்சு அடித்தள்ளிக் கொண்டு ஓடியது. அந்தப் புதர்ப் புதிர் இன்னும் தெரிந்தபாடில்லை. பாஸ்போட் முடிவாக தீர்மானித்தே விட்டார். இறுதியாக அந்த ஆடைகளை ஆசை தீரப்பார்த்துக் கொண்டார். சரி விடுதிக்குப் போவது என்ற முடிவுடன் நடக்கத் தொடங்கினார். கால் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அவர் மனம் எங்கோ ---- எத்தனையோ இடங்களில் தொலைந்து போய் விட்டது.

வந்த வேகத்தை விட இப்போ-து 'கூத்தால' ஜாறம். என்று சொல்லத் தோன்றும் ஒரு வித புதுக் களிப்பு. பாஸ்போட் திரும்பி நடந்து கொண்டிருந்தார் புற்தரைகள், பெரிய பாலங்கள், கறுப்பு வீதிகள் ----, எல்லா வற்றையும் கடந்து விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். இடையே அவரது நடையைச் சிவப்பு விளக்கு வழிமறித்-தது. 'நீ ... எரி ...' என்பது போலப் பார்த்துக் கொண்டு சிவப்பு விளக்கைத் தடையைத் தாண்டினார். பலரும் பச்சை விளக்குக்காகக் காவல் இருந்தனர். அவர்கள் அவரை அதிசயமாகப் பார்த்தனர். பாஸ்போட் இப்பொழுது ஒரு சட்ட விரோதி. கள்ளப் பாஸ்போட். தலைமாற்றப் பட்ட ஒரு போலிப் பாஸ்போட். சில பாஸ்போட்டுக்கள் தலை மாற்றப்-படுகின்றன. ஆனால் எங்கள் பாஸ்போட்டுக்கு இதயமே மாற்றப்பட்டு விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அவர் 14 வயதைத் தாண்டி 41 வயதாகி விட்டார். ஒரு இளைப்பு நடையோடு நடந்து கொண்டிருந்தார். சிவப்பு விளக்குகளை எல்லாம் தாண்டப் போகிறார். அவரை இந்த உலகம் அதிசயமாகப் பார்க்கப் போகின்றது. பச்சை விளக்குகளுக்காகக் காத்திருக்க முடியாத ஒரு அவசரத்தோடு அவர் போகின்றார்.

அவர் போகுமிடமெல்லாம் பூக்கள்; மரங்களிலும் பூக்கள் — அவருக்குக் கையசைத்தன. இலையெல்லாம் கூடப் பூக்கள் — அவை நாணிக் கொஞ்சின. இவையெல்லாம் சுமர்கால மலர்கள்! இவை போர்க்கால மலர்கள் — இந்தப் 14 வயதுப் பாலகனின் இதயத்துக்குள்ளே கண்ணி வெடி வைத்துவிட்டுச் சிரிக்கும் போர்க்கால மலர்கள்.

அவை சிரிக்கட்டும்; அவன் இதயம் வெடிக்கட்டும்.




ஆசைக்கோர் பிள்ளை — அவன்
மீசை அரும்பிடாத எல்லை.
'கிறீச்சிட்டு' வந்ததோர் றக்கு - அவனை
பிடிச்சிண்டு போனதோ தெற்கு
பயந்த வாதியான அவன் பார்வை - அங்கு
பயங்கர வாதி என்றோர் போர்வை.

பாசத்தால் பெற்றதாயோ - அவனை
பாரும் சிறையில் கண்டாள்
கண்ணிலே ததும்பும் நீருடன்
கத்தும் அவள் வாய். அம்மா!

பள்ளியிலே கிடைக்கவில்லைப் பட்டம்
பாரினிலே இருக்கவில்லைச் சட்டம்.
இதனால் எங்கோ கூட்டம்
எழுந்து விட்டதால் போர் மட்டம்.

இட்டறை கொடுக்கும் முத்தம்
இரவு பகலறியா நித்தம்
இளா நெஞ்சம் புண்படுங் கத்தும்
இது ஈழ மாதாக்குக் கேட்கும்.

— திருமதி துரைசிங்கம் - SONDERBERG

படிப்பகம்

www.padippakam.com


சிறுகதை:

# புதிய பரிமாணங்கள்...!

—கே.எஸ்.துரை.—



டெனிஸ் அகதிகள் கழகத்தின் அந்த வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடம் பளிச்சென்று உள்ளும் புறமும் வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்தது.

பொழுது விடிவதற்குச் சில மணி நேரங்களே இருக்கும் அந்தச் சாமப்பொழுதில் சுற்றுவட்டாரம் முழுவதுமே உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. ஆனால் அங்குமட்டும் ஸ்ரீரியோ பொக்சில் 'ரிதம்' இறையாமல் ஒலிக்கும் கிம்லாசனின் பாட்டுக்களும், மரப்படிக்கட்டுக்களில் 'திடும்' திடுமெனச் சிலர் பாய்ந்து ஓடும் சத்தங்களுமாக அமர்க்களம் தான் கிளப்பிக் கொண்டிருந்தது.

பத்துத் தமிழர்கள் குடியிருக்கும் அந்த அப்பாட்மென்ற் வழமையாக மாதத்தின் முதல் வாரத்தில் தான் இப்படிப்பட்ட கொண்டாட்டங்களால் களைகட்டும். ஆனால் இன்று நிகழ்வுகள் வழமைக்கு மாறாக இருந்தது.

"இந்த இடத்தை விட்டுத் தனியாக ஒரு ரூம் எடுத்துக்கொண்டு போனால்தான் நிம்மதி" —

— எப்பொழுது உறங்குவோமெனக் காத்திருந்தான் வசந். நேற்று அதிகாலை களைகட்டிய நரேனின் ' ' இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

நரேன் அடுத்தகிழமை இந்தியாவுக்குப் பயணமாகின்றான். அவனுக்கு இந்தியாவில் திருமணம் நடக்க இருக்கின்றது. மணப்பெண்ணும் பெற்றோரும் போன வாரமே இந்தியா வந்து விட்டனர். திருமணத்தை முடித்துக் கொண்டு இரண்டு மாதங்கள் இந்தியாவில் நின்ற பின்னர் தான் அவன் டென்மார்க் திரும்புவான்.

இதற்காகத் தான் இன்று இந்த விசேட பார்ட்டி!

நரேனும் வசந்தும் பாடசாலைத் தோழர்கள்! திரும்பின திசையெல்லாம் வெண்ணிறமாக மூடியிருந்த பனிக்கட்டிகளைப் புதினம் பார்த்துக் கொண்டு அவர்களிருவரும்

படிப்பகம்

www.padippakam.com


டென்மார்க்கிற்குள் காலடி வைத்து இந்த வினாடியுடன் ஒரு வருடமாகின்றது.

இந்த ஓராண்டுக் காலத்துள் தான் நரேனில் எத்தனை மாற்றங்கள்

"தம்பி! --- வீடுவளவை அடைவைச்சுத்தான் இவனை டென்மார்க்குக்கு அனுப்பிறன்.... அவனை நீதான் கொஞ்சம் கவனிச்சுக் கொள்ள வேணும்"

அவர்களை வழியனுப்பிய போது தனது மகனின் எதிர் காலத்தைப் பற்றி நரேனின் தாய் கொண்டிருந்த கவலையை அவன் நினைத்துப் பார்த்தான். ஓராண்டு ஓடிவிட்டாலும் அந்தக் காட்சி மனதில் அப்படியே இருந்தது.

"டென்மார்க் போனதும் கவனமாகக் காசைச் சேர்த்துச் சீக்கிரமே வளவை மீண்டு போடுவன்" என்றுதான் நரேன் தாய்க்குச் சத்தியம் செய்திருந்தான். ஆனால் இப்பொ- -ழுதோ காசு அனுப்புவதையும் மறந்து ---- வீடு வளவையும் - ---- உறவுகளையும் --- மறந்து ---- வீட்டுக்குக் கடிதம் போடவும் மறந்திருந்தான்.

திடீரென்று எதிர்பாராத விதமாக 'பளீர்' என்ற ஒரு சத்தம்! டென்மார்க்கிலும் குண்டுகள் வெடிக்கின்றதா?--- அவன் எழுந்து வெளியே பார்த்தான்.

அங்கே 'யூரோப்மனோ' கையிலிருந்த பியர்ப்- போத்தலை வீசி எறிந்து கண்ணாடி ஜன்னலொன்றை உடைத்தி- -ருந்தான். அவன் வாயிலிருந்து வெளிவந்த தூஷண வார்த்தைகள் டெனிஸ் அகதிகள் சங்கத்தைத் தாராளமாகவே அர்ச்சித்துக் கொண்டு இருந்தன.

மனோவின் கையால் மூன்றாவது தடவையாகவும் தனது கண்- -ணாடியை இழந்து நின்றது அந்த ஜன்னல் கதவு.

"நான் எத்தினை யூரோப் நாடுகளைக் கண்டனான்! இந்த அரை குறை அகதிகளோட என்னாலை இருக்க ஏலாது! இப்ப ரிக்கற்றைத் தாங்கோடா நான் இலங்கைக்குத் திரும்பிறன்- என்று கூறியபடியே அருகிலிருந்த கதவை வேகமாக உதைத்தான் மனோ!

"எங்கட உயிரைப் பாதுகாக்க ஒரு இடம் தந்தால் போதும். இப்ப நீங்கள் எங்களைத் திருப்பி அனுப்பினால் கண்டிப்பாக அவங்கள் எங்களை எயாப்போட்டிலையே கொலை செய்து போடு- வாங்கள்! டென்மார்க்கில் அகதி கேட்ட பொழுது அவனும் மனோவும் ஏன் நரேனும் கூட இதைத்தான் தாரக மந்திரமாக ஓதியிருந்தார்கள்.

படிப்பகம்

# வர்த்தகப் பண்டங்கள்

—பவித்திரா—




உலகம் இன்று வர்த்தகமயமாகி வருகின்றது என்பதை நாம் அனைவரும் உணர்வோம். அந்த வர்த்தகமயமாதல் மனிதவாழ்க்கையின் சகல படிகளிலும் வேரூன்றி விட்டது என்பது தவிர்க்க முடியாத ஓர் உண்மையாகும்.

அருகில் உள்ள படம் ஒரு மின்குமிழ் [illegible] விளம்பரமாகும். மின்குமிழின் விளம்பரத்துக்கு நீச்சலுடையில் ஒரு பெண் தலைகீழாகத் தொங்குவது எவ்விதத்திலும் பொருத்தமற்றதே. மின்குமிழின் பிரகாசத்தை மக்களுக்கு விளம்பரப்படுத்தப் பெண்ணின் கவர்ச்சி ஓர் ஊடகமாக இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கவர்ச்சி என்னும் மாயவலையில் மக்களை வீழ்த்தி அதன் மூலம் மின்குமிழை விற்பனை செய்ய முனைந்துள்ளனர் வர்த்தகர்கள்.

இன்று அனேக விளம்பரங்களில் பெண்களின் நிலை மிகவும் கேவலமாக்கப்பட்டு வருகின்றது. ஆண்களின் முகச்சவரப் பொருட்கள், சயிக்கிள் ரயர்கள், மின் கலங்கள், புகைப்படக் கருவிகள், சவர்க்காரங்கள்.... போன்ற பலவற்றுக்குப் பெண்களின் கவர்ச்சியே ஊடகமாக்கப்பட்டு வருகின்றது. இங்கு விற்கப்படும் பொருட்களுக்கும் விளம்பரப் படங்களுக்கும் எவ்வித பொருத்தப்பாடும் இருப்பதில்லை.

www.padippakam.com

இவ்வாறு பெண்களின் கவர்ச்சியை மையமாக வைத்து மக்கள் மனதைக் கவரும் வர்த்தகர்கள் அநேகர் உள்ளர். இவர்கள் பொருட்களை விற்கிறார்களா அல்லது பெண்களின் கவர்ச்சியை விற்கிறார்களா என்பது பலருக்கும் புரி-வதில்லை.

பெண்களின் நிலைப்பாட்டை பெண்களே புரியாமல் இருப்பதும் உண்டு. என் அனுபவத்தில் நடந்த ஒரு நிகழ்வை இங்கு கூற விரும்புகின்றேன். பள்ளி மாணவியாக இருந்த காலத்தில் எம் சக மாணவி ஒருத்தி ஒரு பெண்ணின் அரைநிர்வாணப் படம் ஒன்றை தன் புத்தகத்திற்கு உறையாகப் போட்டிருந்தாள். அது மட்டுமன்றி அப் பெண்ணின் அரைநிர்வாணக் கோலத்தின் மேல் தன் பெயரையும் எழுதியிரு-ந்தாள். "பெண்கள் விற்பனைப்பண்டங்களாக மாற்றப்படுவதை நீரும் ஆதரிக்கலாமா?" என நாம் கேட்ட பொழுது அவள் கூறிய பதில்; "இதுபற்றி இன்றுவரை நான் சிந்திக்கவில்லை" என்ப-தேதான். மேலும் பல குடும்பத்தலைவிகள் கூட கலண்டர்களைச் சுவரில் மாட்டும் பொழுது இவ்-வாறாக கவனிக்காது மாட்டிவிடுவதையும் நாம் அவதானிக்க முடிகின்றது. இவர்களுக்கு விளம்-பரங்களில் பெண்கள் வர்த்தகப் பண்டங்களாக மாற்றப்பட்டுள்ளனர் என்ற சிந்தனை இருப்பதில்லை.

தம்மைச் சுற்றியுள்ள நிலைப்பாட்டைப் பெண்கள் சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்திப்பதற்குக் காலங் காலமாக வந்த எம் பாரம்பரியங்களும் இடங் கொடுக்கவில்லை. எமது இலக்கியங்களும் அவர்களின் கண்களைத் திறந்து விடவில்லை. மாறாக பெண்களின் சிந்தனைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டன.

இன்று வெளியாகும் பிரபல மாதர் சஞ்சிகைகளும் அப் பணிகளைச் செய்ய மறந்து விடுகின்றன. மங்கை மாத இதழ் ஒரு ஜனரஞ்சகமான மாதர் சஞ்சிகை ஆகும். அச் சஞ்சிகையில் தான் மேலே நீங்கள் காணும் விளம்பரம் வெளியாகி இருந்தது. (மங்கை - பிப்ரவரி 87. பக்கம் 38)

ஒரு புறம் மாதர்களைப் போற்றியும் மறுபுறம் இவ்வாறான விளம்பரங்களைப் போட்டும் அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றனர். குயிலோசை வாசகர் ஒருவர் கூட "பெண்விடுதலைக்காக அதிக பக்கங்-களை ஒதுக்குகிறீர்களே பேசாமல் மங்கை போல ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கலாமே" என அன்பான தன் குயிலிக்கு அறிவித்திருந்ததை ஜூலை 3 இல் அவதானித்தேன். மங்கையின் விசுவரூப தரிசனம் பற்றி மேலும் நான் வாச-கர்களுக்கு விளக்கத் தேவையில்லை என நினை-க்கின்றேன். பெண்களின் நிலைப்பாட்டை இனிமேலா-வது சிந்திப்போமா?

படிப்பகம்

www.padippakam.com

"ம்.... டென்மார்க்கின் பருவ காலங்களில் மட்டுமா மாற்றம்? வந்த ஒரு வருஷத்திலேயே இப்படித் தங்களை மறந்தவர்கள் எத்தனை பேர்..." என நினைத்துக் கொண்டே நரேனின் ரூமைப் பார்த்தான். அது உட்பக்கமாகப் பூட்டப்பட்டு இருந்தது. இரண்டு மூன்று டெனிஸ் பெண்கள் வெற்றுப் போத்தல்கள் உருண்டது போல வெளிப்புறச் சோபாவில் உருண்டு கொண்டிருந்தார்கள்.

"மச்சான்! இது குளிர்நாடு! றெட்குறொசில சிகரெட் வேற பிரியாத் தாறாங்கள்! அதனபடியால் சிகரெட் குடிப்பதில பிழையில்லை!"

"பியரும் விஸ்கியும் நல்லாக் குடிக்கலாம்! அது குஞ்சை பார்ட்டிக்கூடம் போற பொடியள் கூடக் குடிக்கிறது தானே..."

"டெனிஸ் குட்டியள்... சிலபேர் பியரைக் குடுத்தால் படுக்கைவரைக்கும் வாறாளவை.... அதுகூட இந்த நாட்டில பிழையான ஒண்டுமில்லையே."

இப்படியே நரேன் தன்னுடைய களியாட்டங்களுக்கெல்லாம் ஒவ்வொரு காரணங்களாகச் சொல்லிச் சொல்லி வசந்தின் புத்திமதிகளை எல்லாம் உதறித் தள்ளியிருந்தான்.

தாய் தகப்பனின் கண்காணிப்பில்லாத ஒரு தேசத்தில் மனம் போன போக்கில் ஓடிக்கொண்டிருந்த நரேன் கடைசியில் தான் பிறந்த கலாச்சாரத்தையும் கடைப்பிடித்த மதத்தையும் தாக்க முற்பட்ட போதுதான் வசந் அவனுடன் எதிர்பாராத விதமாக முரண்பட வேண்டி வந்தது.

இது நடந்தது அவர்கள் டெனிஸ் மொழிபடிக்கும் ஸ்போஸ்கூலில்! டெனிஸ் ஆசிரியர் உலேயுடன் தமிழ்க் கலாச்சாரத்தைப் பற்றி டெனிஸ் மொழியில் அவர்களுடைய வகுப்பிலுள்ளவர்கள் கதைத்துக் கொண்டிருந்த போது நரேனின் தருணம் வந்தது.

"தமிழ்க் கலாச்சாரமோ:------ அதைப்பற்றிக் கதைக்கவே எனக்கு வெட்கமாயிருக்கு. ஐரோப்பிய நாடுகளோட ஒப்பிட்டால் எங்கட கலாச்சாரம் ஆக உதவாதது!"

"இந்து மதத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்?"

"அதோ.... இப்ப நான் அதையும் விரும்பயில்லை. அதிலும் நிறைய காட்டுமிராண்டித்தனங்கள் இருக்கு."

அப்படி என்றால் டெனிஸ் கலாச்சாரத்தைப் பற்றி என்ன

www.padippakam.com



நினைக்கிறீர்....?

"பின்ற இல்ச்சர்!"

உங்கட நாட்டில இப்ப நடக்கிற பிரச்சினையள் தீர்ந்தால் நீர் இலங்கைக்குத் திரும்ப தயாராக இருக்கிறீரா...?

'இல்லை, அந்தக்கலாச்சாரத்துக்குள்ளை திரும்பவும் போய் வாழ நான் விரும்பயில்லை".

இப்பொழுதுதான் வசந் இடையில் குறுக்கிட்டான்.

"எங்கட கலாச்சாரத்தில மட்டுமில்லை. எல்லாக் கலாச்சாரங்களிலையும் திருத்தப்பட வேண்டிய விஷயங்கள் இருக்கு. அதுக்காக ஒரு கலாச்சாரத்தைக் காட்டுமிராண்டித் தனமானது என்று கேலி செய்வது பிழையான காரியம்."

"வசந்! உம்முடைய கருத்தை டெனிசில் விபரியும்" என்று உளவே கூறினார்.

"பிறந்தது முதல் கடைப்பிடிச்சு வாற கலாச்சாரத்தையும் மதத்தையும் டென்மார்க்கில கிடைத்திருக்கிற ஐந்து வருஷ அநுபவத் கண்டவுடனே இவர் தூக்கி எறிய நினைக்கினம். இதே ஆக்கள் இந்த நாட்டை விட்டு இன்னுமொரு நாட்டுக்குப் போனால் பிறகு இந்த நாட்டுக் கலாச்சாரத்தையும் காட்டுமிராண்டித் தனமென்றுதான் சொல்லுவினம்?

"யா--- கொட்."

இந்தக் கருத்தை அவன் தனக்குத் தெரிந்த டெனிசில் விபரித்த பிறகு. நரேன் அவனுடன் கதைப்பதை நிறுத்தி விட்டான்.

☆

நரேனின் பயணத்துக்கான ஏற்பாடுகளெல்லாம் ஓ. கே.

இன்று மாலை அவன் இந்தியா பயணமாகி விடுவான்!

"என்ன மச்சான்! யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்----? நரேனைப் பார்த்து மதே கேட்டான்.

"ஒண்டுமில்லை.... ஒரு முக்கியமான கடிதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனான்"

சில கடிதங்கள் தபால் தூவாரத்தால் வந்து விழுந்தன.

நரேன் எதிர்பார்த்த கடிதமும் வந்திருக்க வேண்டும்! அவன் கடிதத்தைப் படித்தபின் முகம் மலர்ந்து காணப்பட்டான்.

படிப்பகம்

www.padippakam.com


"என்ன நரேன்! மகிழ்ச்சி பொங்கி வழியுது.? பொம்பிளை-யோட கடிதப் போக்குவரத்தும் தொடங்கியாச்சுப் போல....?

"இல்லை மச்சான் எதிர்பார்த்த செய்தி கிடைச்சிட்டுது. இனிச் சந்தோஷமாகப் புறப்படலாம்"

"விளங்கேல்லை மச்சான்!"

"என்ர சிநேகிதன் ஒருத்தன் உரும்பிராயில் இருக்கிறான் அவ-னுக்குக் கடிதம் போட்டு பிள்ளையின்ர கரெக்டரைப் பற்றி விசாரிச்சிருந்தனான்! அதைப் பற்றித்தான் கடிதம் வந்திருக்கு" இந்தக் காலத்துப் பெட்டையளைக் கணக்க நம்பக்கூடாது மச்சான்"

"அம்மா இரடா! கரெக்டர் ஏ.வன் என்று எழுதியிருக்கிறான். பெட்டையை வீட்டுக்கு வெளியிலேயே காணுறது அபூர்வமாம்

"அப்பிடியே! நீ குடுத்து வைச்சனி மச்சான்.

★

டக்! டக்...! என்று யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. வசந் எழுந்து சென்று கதவைத் திறந்தபோது நரேன் நின்றுகொண்டிருந்தான்.

"நரேன் உள்ளே வா...!"

"இல்லை டக்சி வந்திட்டுது. நான் பயணம் சொல்லத்தான் வந்தனான் போயிட்டு வாறன்."

'பழகின தோஷத்திற்காக கடைசியில் அவன் பயணம் சொல்லவாவது வந்தானே' என்று மனதில் ஒரு திருப்தி

"எங்கடை வாழ்க்கை முறையையும் எங்கட கலாச்சாரத்தையும் வெறுக்கிற நீ! உன்ரை படுக்கைக்கு வாற டெனிஸ்காரியளில் ஒருத்தியைக் கட்டியிருக்கலாம் தானே. பிறகேன் தமிழ்ப் பொம்பிளையைத் தேடி இந்தியாவுக்கு ஓடுகிறாய்...." என்று நாலு வார்த்தை நறுக்கென்று கேட்க வேண்டும் போல அவனுக்கு மனது துடித்தது. இருந்தாலும் இந்த நேரத்தில் அது கூடாது என நினைத்தவனாய் "சந்தோஷமாகப் போய்விட்டு வா நரேன்" என்று அவனுக்கு விடை கொடுத்தான்.

★

GOOD FRIDAY என்று ஒன்று இருந்தால் நிச்சயம்
EASTER SUNDAY என்ற ஒன்றும் வந்தே தீரும்.

படிப்பகம்

www.padippakam.com

# இறப்பு ஓர் அழைப்பு!

— பிறவி —

ஆதவனை இழந்துவிட்ட
அந்த நாள்
உறங்கு நிலைக்குச்
சென்றிருந்தது
நள்ளிரவோ நடுங்கியது
நாய்கள் ஓலமிட்டன

அந்தோ பரிதாபம்!
சென்றிக்குச் சென்ற
நம் செல்வன்
Oh--- நம் செல்வன்
அபிமன்யுவாகி விட்டான்
அரசு படை அவனைச் சுற்றி வளைத்தது
அவன் ஆவி அலறியது
ஆயினும் அவனைப் பந்தாடினார்கள்!
இதயமே அற்ற அந்த இரும்பர்கள்.
ஆம்!
அந்தப் பூவை நசுக்கியே விட்டனர்

Oh! எம் செல்வனே!
எத்தனை ஆசைகள்!
எத்தனை உறவுகள்!
எத்தனை பந்தங்கள்!
எல்லாவற்றையும் துறந்து
துறவியே நீ எங்குற்றாய்.
எதையுமே துறக்க முடியாத நாம்
உன் துறவுக்குத் தலை வணங்குகிறோம்

உன் துறவு புனிதமானது
ஆம்!
பலனையோ பதவியையோ
எதிர்பாராதது.

படிப்பகம்

www.padippakam.com



அன்று
தன் மக்களைக் காத்திட
விடமுண்டானாம் நீலகண்டன்.
இன்று அவனுக்காக
ஆயிரமாயிரம் கோவில்கள்
அவருக்கென அடியவர் கூட்டம் வேறு

பாவிகளை இரட்சிக்க
சிலுவை ஏறினாராம் யேசு
இன்று அவருக்காக
உலகெங்கும் திருச்சபைகள்

உலகின் மீட்பர்கள் வரிசையில்
செல்வமே! நீயும் ஒரு மீட்பன்தான்
ஆனால்,
உனக்காக இன்று எஞ்சி நிற்பன
சுவரொட்டிகள் தானா?
மாரி வந்து கோடை போனால்
அவையும் அழிந்து போகும்.

உன் குருதியாற்று நீர்
வானம் பார்த்த எமக்கு
ஒரு வரப்பிரசாதமா?
அன்றி
உன் குருதி
நுளம்புக்கு D.D.T
ஆனது போல ஆகிவிட்டதுவா?
அன்றி
உன் அவதார மகிமை
இந்த மானிட ஜாதிக்குப்
புரியாமல் போனதுவா?

இல்லை! இல்லை!
உன் இறப்பு
ஆம்! உன் இறப்பு
அது எமக்கொரு அழைப்பு.

செல்லும் வழியும் இருட்டு
செல்ல வேண்டிய தூரமும் அதிகம்
இச் சமுதாய வரைபடத்தில்.

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் புகலிடமும் அகதிகள் நிலைப்பாடும்

— K. மோகன் - மொழிபெயர்ப்பாளர் —
— BIRKEROD —

முதலாவது உலகப்போரில் டென்மார்க் ஆங்கிலேயருக்கு எதிரணியில் சேர்ந்து கொண்டது. இதன் விளைவாக கொப்பனேக்கனில் உள்ள பிரசித்தி பெற்ற பிரதான நடைபாதையின் முகப்பும் மற்றும் பல கட்டிடங்களும் ஆங்கிலேயரின் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகின.

இரண்டாவது உலகப்போரில் டென்மார்க் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டது. இதன் விளைவு ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டது. அப்போது இருந்த டெனிஸ் மக்கள் அந்த ஆக்கிரமிப்பை விரும்பியதாகவே பலரும் பேசிக்கொள்கின்றனர். பின் சிறிது காலம் செல்ல தாங்கள் அடிமைப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த டெனிஸ் மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் 5% ஆக இருந்த மக்கள் புரட்சி 95% ஆக மாற ஜேர்மன் நாசிப்படையை எதிர்த்தது.

டென்மார்க்கின் இன்றைய நாளிதழான 'INFORMATION' அப்போது ஜேர்மன் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக புரட்சியாளர்களால் மறைமுகமாக வெளியிடப்பட்டது. புரட்சிக் காலத்தில் அண்டை நாடான சுவீடனிலும் மற்றும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின் இதனால் பாதிக்கப்பட்ட நாடுகள் அனைத்தும் 1951 ஆவணி 28ம் திகதி ஜெனீவாவில் அகதிகளை ஏற்றுக் கொள்வதாக ஓர் உடன் படிக்கை செய்து கொண்டன. இதில் கையெழுத்திட்ட நாடுகளில் டென்மார்க்கும் ஒன்றாகும்.

அங்கு அகதிகளை ஏற்பதற்குக் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம்; ஒருவர் தன்னுடைய இனம், மதம், நாட்டுரிமை என்பவற்றால் பாதிக்கப்பட்டால் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் அவர் கொண்டுள்ள அரசியல் கருத்துக்காக பாதிக்கப்பட்டால், அல்லது குறிப்பிடத்தக்க பயத்தின் காரணமாக தன்னுடைய சொந்த நாட்டை விட்டு வெளியேறி ஜெனீவாவில் செய்யப்பட்ட உடன் படிக்கையின் கீழ் அகதியாகக் காணப்பட்டால் அவர் இங்கு "K" அந்தஸ்துள்ள அகதியாகக் கணிக்கப்படுவார். எனக்குத் தெரிந்தவரை டென்மார்க்கில் 3, 4 தமிழர்களுக்குத் தான் இந்த அந்தஸ்துக் கிடைத்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com


ஒருவர் எவ்வாறு இந்நாட்டிற்கு-வருகை தந்து ஜெனிவாவில் செய்யப்பட்ட உடன்படிக்கையின் கீழ் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி அரசாங்கத்தை வற்புறுத்த முடியாது. சமீபத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஈரானியர்கள் தாம் பல மாதங்களாக ஒரு முடிவும் இல்லாமல் இருப்பதாகவும் தங்களுக்கு ஒரு முடிவு செய்யும் படியும் ஊர்வலம் ஒன்றை நடாத்தினார்கள். இதற்கு அகதிகள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து செயலதிபர் விட்ட அறிக்கை; இதனால் அவர்கள் அடையப்போவது ஒன்றுமே இல்லை" என்பதுதான்.

ஜெனிவாவில் செய்யப்பட்ட உடன்படிக்கையின் கீழ் இல்லாமல் அதனுடன் சார்ந்த அரசியல் தஞ்சம் கோரிய ஒருவர் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று டென்மார்க் கருதினால் அவர் "F" அந்தஸ்துள்ள அகதியாக ஏற்றுக் கொள்ளப்படுவார். டென்மார்க்கிலுள்ள பல தமிழர்களுக்கு "F" என்னும் அகதி அந்தஸ்தே கிடைத்துள்ளது.

இந்த இரு வகையான அகதி அந்தஸ்துக் கிடைத்தவர்கள் டென்மார்க்கில் தொடர்ந்து இரு வருடங்கள் இருந்த பின்பு தங்களுடைய சொந்த நாட்டில் பிரச்சனைகள் தீர்ந்த போதிலும் இங்கு தொடர்ந்தும் வசிக்கலாம். ஆனால் அவர்கள் பாரதூரமான குற்றச்செயல்களில் ஈடுபட்டால் நாடு கடத்தப்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

ஆறு வருடங்களின் பின்பு இவர்கள் டெனிஸ் கடவுச் சீட்டுப் பெறத் தகுதியுடையவர்களாவார்கள். அப்போது வெளிநாட்டு அமைச்சரகம் பொலிசாரின் உதவியுடன் இவர்களின் கடந்த காலத் தொழில் குற்றச் செயல்கள் டென்மார்க்கிலும் டென்மார்க் மக்களிடையிலுமான இவர்களுடைய தொடர்பு, மொழியறிவு ஆகியவை பற்றி ஆராய்ந்து அமைச்சர் இடம் அறிக்கையைச் சமர்ப்பிக்கும். அதனை வைத்தே அமைச்சர்கள் இது டெனிஸ் கடவுச் சீட்டுப்பற்றி முடிவெடுக்கும்.

இப்பொழுது மூன்றாவது அகதிகள் நாடற்ற பலஸ்தீனியர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அகதிகள் பெற்றவர்கள் வருடத்திற்கு ஒரு முறை அனுமதி புதுப்பித்தல் வேண்டும். அத்துடன் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் உடனடியாக நாடு கடத்தப்படும் சூழ்நிலையும் ஏற்படலாம். இவர்கள் பிரச்சனைகள் முடிந்ததும் நாடு திரும்பவும் வேண்டும். 1986 கார்த்திகை மாதத்தில் டென்மார்க் அகதிகள் சம்பந்தமாக சீர் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி உள்ளது. இது சம்பந்தமாகவும் 'குடும்ப ஒன்றிணைப்புச்" சம்பந்தமாகவும் அடுத்த இதழில் ஆராய்வோம்.

படிப்பகம்

www.padippakam.com


# காரணம் அறிவாயோ!

[டெனிஸ் கற்கும் பொழுது சிலசமயம் விநோதமாக இருக்கும். கூடவே ரசிக்கக் கூடியதாகவும் இருக்கும். HVID என்றால் வெள்ளை. LØG என்றால் வெங்காயம் இரண்டும் சேர்ந்து HVIDLØG அதாவது வெள்ளைப்பூடு ஆனது. இவ்வாறு அனேக சொற்களுக்குக் காரணப் பெயர்கள் இருக்கும் என்ற சந்தேகத்தில் முதல் KØBENHAVN பற்றிய சந்தேகம் எழ அதையே கருவாக வைத்து திருமதி HENNIETTE RIS JERGEN என்ற ஆசிரியையிடம் ஒளிவிக்கு ஓர் கட்டுரை தருமாறு கேட்ட பொழுது தன் தந்தையுடன் கலந்தாலோசித்து இதை எம் வாசகர்களுக்காக அளித்துள்ளார்.]

டென்மார்க் மிகப்பழைய நாடு; கூடவே மிகப் பழமையான மொழி. ஆனால் அம்மொழி காலத்திற்குக் காலம் திரிவுபட்டு வந்ததனால் இந் நாட்டு மக்களுக்கே இந்த நாட்டின் சில நகரங்கள் தாங்கி நிற்கும் அர்த்தங்கள் புரிவதில்லை.

**KØBENHAVN:** இது நீண்ட காலமாக ஓர் துறைமுகமாக விளங்கியது. 800-900 வருடங்களாகத் தான் நகரமாக விளங்குகிறது. HAVN என்பது துறைமுகம். 1193ம் ஆண்டு இது HAFN என வழங்கப்பட்டதாக அறியப்படுகின்றது. KØBEN என்பது KØBEMAND என்ற வியாபாரிகளினது என்பதில் இருந்து திரிவுபட்டு வந்தது. எனவே KØBEN என்பதும் HAVN என்பதும் சேர்ந்து வியாபாரிகளின் துறைமுகம் அல்லது வர்த்தகத் துறைமுகம் எனப் பெயர் பெற்றது. அப்பெயரே KØBENHAVN ஆகும்.

**ROSKILDE:**

Ro என்பது அக்காலத்தில் வாழ்ந்த டெனிஸ் மகன் ஒருவரின் பெயராகும். அது ஓர் இளவரசனின் பெயரும் கூட. KILDE என்பது நீர் ஊற்று எனப் பொருள்படும். இன்றும் ROSKILDE இல் பல நீர் ஊற்றுக்கள் உண்டு. எனவே RO இன் நீர் ஊற்றுக்கள் என ROSKILDE பெயர் பெற்றது.

**ØR ஐ விகுதியாகக் கொண்ட நகரங்கள்:**

OR என்பது ஆதி நோர்வே மொழியில் சிறிய கற்கள், அல்லது கூழாங்கற்கள் எனப்பொருள்படும். இடங்களில் அது வரும் பொழுது சிறிய கூழாங்கற்கரைகள் (BEACH) எனப் பொருள்படும். உதாரணமாக KORSØR என்ற நகரை எடுத்துக் கொண்டால், இதில் KORS என்பது ஓர்

படிப்பகம்

www.padippakam.com


கடற்கரைக் குறியீடு ஆகிய சந்திப்பை (CROSSING) குறிக்கும், KORSOR என்பது குடாங்கள் நிறைந்த கடற்கரைச் சந்திப்பாகும்.

**HELSINGOR:** இது HALSINGAR என்னும் சொல்லில் இருந்து வந்தது. இதில் HALS என்பது ஒடுங்கிய பகுதி எனப் பொருள்படும். (HALSINGAR என்பது ஒடுங்கிய ஓடையில் கூட்டமாக வாழும் மக்களைக் குறிக்கும்) OR என்பது கற்பிரதேசம். எனவே HELSINGOR என்பது கற்களாலான ஒடுங்கிய ஓடை எனப்படும். இங்கு டென்மார்க்கிற்கும் சுவீடனுக்கும் இடையிலான ஒடுங்கிய நீர் ஓடையை இது குறிக்கின்றது.

**ROD ஐ இறுதியாகக் கொண்ட சொற்கள்:** ROD என்பது RUTH என்னும் வினைச் சொல்லின் திரிந்த வடிவமாகும். RUTH என்பது காடுப் பிரதேசங்களை அழித்து நகரமயமாக்குதலைக் குறிக்கும். NORTH SJÆLLAND இல் காட்டுப் பகுதிகள் அதிகம். இங்கு HILLEROD என்பதில் HILLE என்பது HILDIN என்ற டெனிஸ் மகனின் பெயர். அவர் காட்டை அழித்துத் துப்புரவு செய்தமையினால் HILLEROD என வந்தது. HILDIR'S CLEARING என ஆங்கிலத்தில் கூறலாம். இவ்வாறே BIRKEROD, ALLEROD, LILLEROD ( ) போன்ற நகரங்களும் காரணப்பெயர் பெற்றன.

**DRUP, TRUP, RUP என்பவற்றை இறுதியாகக் கொண்ட இடங்கள்:** இவை அனைத்தும் TORP என்ற கி.பி. 14ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்துக்குரிய சொல்லில் இருந்து திரிவு பட்டது. இதன் அர்த்தம் "பிரதேச உடன்படிக்கையின் விளைவு" எனப்படும். இப் பிரதேச உடன்படிக்கையினால் கிராமங்கள் பல தோன்றின. அவை மக்களின் பெயரில் அமைந்த கிராமங்கள் ஆகின.

TÅSTRUP: TÅS என்பது THORSTEN என்னும் பெயர்ச் சொல்லின் திரிபாகும். எனவே இது THORSTEN இன் கிராமம் எனப்படும்.

ÅGERUP: ÅGE என்பது ஓர் பெயர்ச் சொல். இதனை இது ÅGE இன் கிராமம் எனப்பட்டது.

**BORG என்பதை இறுதியாகக் கொண்ட இடங்களின் பெயர்கள்:** BORG என்பது பழைய அரண்கள், அதன் சுற்றாடல் ஆகியவற்றைக் குறிக்கும்.

A: SONDER BORG - இங்கு SONDER என்பது தெற்கு எனப்படும். எனவே SONDERBORG தெற்கேயமைந்த அரண் எனப்படும்.

B: ÅLOBORG: இதில் ÅL என்பது ALL என்னும் ஆதி நோர்வே சொல்லின் திரிந்த வடிவமாகும். இங்கு ALL என்பது ஆழமான கால்வாய் எனப் பொருள்படும். எனவே ÅLOBORG என்பது ஆழமான கால்வாயுடன் கூடிய நீர் அரண் எனப்படும்

படிப்பகம்

www.padippakam.com


| இங்கே நான்! | எங்கே நீ? |
|---|---|
| MR VICTOR. JEYARATNAM RAJAKILI.<br>PALTHOMTERASSERNE - 48A<br>3520 FARUM.<br>T/P- 02-95 42 21 | RAMES RATNAM<br>NAVALI. |

# இதயக் குமுறல்

கெஞ்சுகிறாள் பெற்ற தாய் - என் பிஞ்சு மகனே!
கொஞ்சிக் குலாவித் திரிகிறாயா -
பஞ்சாகப் பறக்கிறாள் உன் தங்கை பட்டினியால்.
துஞ்சுகிறாள் உனை எண்ணி உன் அக்காள்.

துலாவிலே தூங்குகிறான் உன் தந்தை - நீயோ
உவர்வுடன் தூங்குகின்றாயா?
கலாவிலே வைத்த அன்பு காற்றாகப் பறந்ததடா
குலாவித் திரிகின்றாயா மகனே! குலமகளை மறந்து

— தவயோகன் NAESTVED

மறத்தமிழர் மரபு வந்தோம் நாங்கள்
இன்று மாற்றானின் மொழி படிக்கின்றோம்
அன்று அந்நியரைக் குடியமர விட்டோம்
இன்று அகதிகளாய் அல்லல்படுகின்றோம்.

— சி. பாலசுப்பிரமணியம் —
— SUVEN BORU —



KLAUS: Jeg underviser i Danmark.

ஒருவர்: மச்சான்! என்னடா சொல்லுறார்.

மற்றவர்: டென்மார்க்கில உணவும் விசாவும் தருகினமாம்.

— பபி —
HUNDIGE

www.padippakam.com

இரா. அமலனின்




இலேசாகத் தூறிக் கொண்டிருந்த மழை இப்போது கூடியிருந்தது. முற்றத்தில் போட்டிருந்த சிறிய பந்தலில் இருந்து ஆங்காங்கே சிந்திய மழைத்துளிகள் நிலத்தில் கோலம் போட்டுக் கொண்டிருந்தன. மேய்ச்சலுக்காகச் சென்ற தாய் ஆடும் குட்டிகளும் திரும்பி வந்து கொட்டிலில் ஒதுங்கின.

மளிகைச் சாமான்களுடன் வந்த ரஞ்சித் கூடையை அடுக்களையில் வைத்துவிட்டுக் கொடியில் இருந்த சால்வையால் தன் தலையைத் துவட்டினான்.

வீடு அமைதியாய் வெறிச்சோடிய நிலையில் இருந்தது. யாரையும் காணவில்லை. ஆனால் முனகல் சத்தம் மட்டும் மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அதைக் காது கொடுத்து உற்றுக் கேட்ட ரஞ்சித் தாயின் சத்தம் என உணர்ந்து கொண்டான். அறையை எட்டிப் பார்த்தான்.

ஒரு மூலையில் குந்தியிருந்து அழுது கொண்டிருந்த தாயினருகே சென்றவன் அவள் முகத்தை மேலே தூக்கினான். அவள் நெடு நேரமாக அழுதிருந்ததால் கண்கள் சிவந்திருந்தது.

"அம்மா! என்னம்மா அழுது கொண்டு இருக்கிறியள் இப்பிடியே இருந்தால் ஒண்டுமே நடக்காது போட்டது போட்டபடியே கிடக்குது இதையெல்லாம் ஒழுங்கு படுத்துவது யார்?"

தன் சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துவிட்டு அவன் மேல் பார்வையைப் படரவிட்டாள்.

"எப்ப தம்பி வந்தனி? வெளியால மழை தூறுது போல கிடக்கு - நனைஞ்சிட்டியோ?"

படிப்பகம்

www.padippakam.com



"இல்லையம்மா நீங்கள் முதலில் எழும்பிச் செய்ய வேண்டிய வேலைகளைப் பாருங்கோ. எல்லாரிட்டயும் வேண்டின பாத்திரங்களைத் திருப்பிக் கொடுக்க வேணுமெல்லோ. அதுகளை கணக்குப் பார்த்துத் தாங்கோ."

"ம்... அதையெல்லாம் செய்யக் கூடிய தைரியத்திலையே தம்பி நானிருக்கிறன் ... நான் என்ன பாவம் செய்தனோ கடவுள் இப்பிடியெல்லாம் சோதிக்கிறார் ... அந்தப் பாவியை மூத்த பிள்ளையாய்ப் பெத்துப் போட்டதுக்கு இப்ப கவலைப் படுகிறன். ... ம்... என்னதான் கோபம் இருந்தாலும் பெத்தவன் எண்ட பாசம் கூடவா இல்லாமல் போச்சுது அவனுக்கு. கொள்ளி வைக்கக் கூட வராமல் விட்டிட்டானே பாவி..... எல்லாத்துக்கும் காரணம் அவள்தான். என்ர குடும்பத்தைப் பழிச்சுப் பார்க்கிறதில அவளுக்கென்ன ஆனந்தமோ தெரியவில்லை. அவள் மட்டும் என்ர கண்ணில படட்டும் .... பிறகு தெரியும் என்னைப்பற்றி அவளுக்கு...."

வாயில் வந்தபடி புலம்பிக் கொண்டிருந்தாள் சரசு. அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது எனப் புரியாமல் திண்டாடினான் ரஞ்சித்.

"சரியம்மா நடந்ததுகளை நினைச்சுக் கவலைப்படுவதில் பிரயோசனமில்லை. மனதைத் தேற்றிக் கொண்டு நடக்க வேண்டியதைப் பாருங்கோ."

"நீ சுகமாகச் சொல்லிப் போட்டாய் தம்பி. இவ்வளவு காலமும் கொப்பர் இருந்ததாலை குடும்பத்தைக் கட்டி இழுத்தவர். அதாலை ஒருத்தரிட்டையும் கையேந்தாமல் வாழ்ந்திட்டம். இனிமேல் என்ன செய்யப் போறன். எங்களிட்ட ஏதாவது தோட்டம் துரவு இருந்தாலும் பரவாயில்லை. அதையாவது வித்துப் போட்டுச் சீவிக்கலாம். ஆனால் எங்களிட்ட என்ன இருக்கு.... இதுகளை யோசிக்க யோசிக்க... நானும் கெதியில போயிடுவேன்."

**உயிரியல்**

கண்ணீர் விட்டு
வளர்த்ததால் தான்
நம் காதல் செடி
இவ்வாறு
மதாளித்து வளர்ந்திருக்கிறது

காரணம்
கண்ணீரில்
கனிப் பொருட்கள் அதிகம்

— அகிலன் —
DENMARK

படிப்பகம்

www.padippakam.com


கண்களில் நீர் ததும்பியதும் மேலே தொடர முடியாமல் நிறுத்தினாள்.

"என்னம்மா இப்படியெல்லாம் கதைக்கிறியள். நான் ஒருத்தன் இருக்கிறதை மறந்திட்டீங்களோ? இவ்வளவு காலமும் அப்பா உழைச்சார் இனிமேல் நான் உழைச்சு உங்களையும் தங்கச்சியையும் காப்பாற்றுவன். அது என்ரை கடமை."

தன் உணர்ச்சிகளைக் கொட்டினான்.

"என்ன தம்பி சொல்லுறாய்? அப்ப உன்ர படிப்பு என்னமாதிரி?"

இதற்கு என்ன பதில் சொல்வதெனப் புரியாமல் விழித்தான். அதைச் சிறிது நேரத்தின் பின் ஒரு முடிவுக்கு வந்தான்.

"ம்.... அப்பா இருந்தாலாவது படிப்பைப் பற்றி யோசிக்கலாம். ஆனால் இனிமேல் அதுக்காகக் கவலைப்படவேயில்லை. நான் இனித் தொடர்ந்து படிக்கப் போவதில்லை. நான் உழைக்கப் போறன். நல்லா யோசிச்சுத் தான் இந்த முடிவை எடுத்தனான்."

"நீ நல்லாய்ப் படிச்சு ஒரு நல்ல வேலை எடுத்து நாலு காசு சம்பாதிச்சு முன்னுக்கு வரவேணும் என்றெல்லாம் கனவு கண்டேன். ஆனால் இப்ப நீ சொல்லிறதைக் கேட்க .... எனக்கு .... .... எனக்கு என்ன சொல்லிறதென்டே தெரியேல்லை."

ரஞ்சித்தின் படிப்பு நின்று விடுமோ என்ற பயம் அவளைத் தொற்றிக் கொண்டது. ஆனால் ரஞ்சித்தோ நிதானமாகவே தன் முடிவைக் கூறினான். தன் குடும்பத்துக்கு ஒரு சில உறவினர்கள் இருந்தும் கூட தகப்பனின் மரணச்சடங்கின் போதும் அதன் பின்னரும் கூட எவ்வித்திலும் சொந்தமில்லாத நாகலிங்கம் முதலாளி செய்த உதவிகள் யாவும் அவன் கண்முன் நிழலாடின. அந்தத் தைரியத்தில் அவரிடமே தனக்கு ஒரு வேலை தருமாறு கேட்டால் அவர் மறுக்கவா போகிறார் என்ற எண்ணம் தோன்றியது.

"...ரெயிலர் வேலை என்றால் என்ன .... அதையும் செய்வதற்கு ஒரு திறமை வேண்டும்"

www.padippakam.com



தானே ---- இதைப்பற்றி அம்மாவிடம் சொல்லவா ---- அல்லது வேண்டாமா ----- எப்படியாவது அம்மாவை இதுக்குச் சம்மதிக்க வைக்க வேண்டும்.....” – ரஞ்சித் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

“அம்மா! நாகலிங்கம் முதலாளி ஒரு முறை அண்ணையைத் தன்ர கடைக்கு வந்து வேலை செய்யச் சொன்னவரெல்லோ. அப்போ நீங்களும் அப்பாவும் அண்ணையைக் கரைச்சல்படுத்திப் போகச் சொல்லியும் அவர் போகேல்லை. அதாலை ---- அந்த வேலையை எனக்குத் தரச் சொல்லிக் கேட்டால் அவர் நிச்சயமாகத் தருவார். இந்த நேரத்தில வேலை எடுப்பது அவ்வளவு சுலபமல்ல. அதாலை தான் இந்த வேலைக்குச் சேரலாமென முடிவு எடுத்தனான். உங்களுக்கும் விருப்பம் தானே அம்மா?”

சரசுவிற்கு இச் செய்தி கவலையளித்தாலும் ரஞ்சித்தின் சமாதானத்தினால் ஒருவாறு சம்மதித்தாள். ரஞ்சித் இதைப் பற்றிக் கதைப்பதற்காக நாகலிங்கம் முதலாளியைச் சந்திக்கப் போனான். வெளியில் வந்து மழை இன்னும் பெய்கின்றதா எனப் பார்த்தான். அது ஓய்ந்திருந்தது. குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டிகளைக் கண்டவன் அவற்றை உள்ளே கொண்டுபோய்க் கட்டிவிட்டுப் புறப்பட்டான்.

**- அகதிகள் -**

நல் வாழ்க்கைக்காகத்
தவமிருக்கும்
சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்கத் துடிக்கும்
பறக்க முடியாமல்
சிறகொடிக்கப்பட்ட
வானம் பாடிகள் -

அலென் - அலோசியஸ்
HERNING.

☆

நாகலிங்கம் முதலாளியின் புண்ணியத்தில் ரஞ்சித்துக்கு வேலை கிடைத்து விட்டது. அவன் வேலைக்குச் செல்லத் தொடங்கி விட்டான். காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தது.

★

உச்சி வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. கிணற்றடியில் நின்ற சரசு தோய்த்த துணிகளைப் பிழிந்து ஒரு வாளியில் போட்டுக் கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் முடித்துவிட்டு முற்றத்திற்கு வந்து ஒவ்வொன்றாகக் காயப் போட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



நெடு நேரம் கொதிக்கும் வெய்யிலில் நின்றவளின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள் சிந்தின. அடிக்கடி நிழலைப் பார்த்துக் கொண்டு நேரத்தைக் கணித்துக் கொண்டாள். ரஞ்சித் வேலையால் வருவதற்கு முன்னரே வீட்டு வேலைகளை முடித்துவிட வேண்டும் என்பதனைப் பம்பரமாக சுழன்று கொண்டிருந்தாள். இவற்றுக்கெல்லாம் காரணம் காலையில் வந்த கடிதம் தான்.

எல்லாத் துணிகளையும் காயப் போட்டபின் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"அப்பப்பா - - - என்ன வெய்யில் - - -"

சரசு வாளியைக் கொண்டு சென்று கிணற்றடியில் வைத்துவிட்டு வரவும் ரஞ்சித் வேலையால் மதிய உணவருந்த வரவும் சரியாக இருந்தது.

"வா தம்பி! வா! காலமை தொடக்கம் நீ எப்ப வருவாய் எண்டு பாத்துக் கொண்டிருந்தனான்."

சரசு அவசரமாக வீட்டினுள் சென்றாள்.

"என்னம்மா விசயம்?"

வந்திருந்த கடிதத்தைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள்.

"இந்தா தம்பி நீயே பார்"

அதைப் பிரித்துப் படித்தவன் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. சந்தோஷத்தில் என்ன செய்வதென்று புரியாமல் நின்றான்.

"அம்மா! ரிசல்ற் வந்திருக்குது. எனக்குக் கம்பஸுக்கு இடம் கிடைச்சிருக்குது. நான் - - - நான் - - - இதை எதிர்பார்க்கவே இல்லையம்மா."

"எனக்கு முந்தியே தெரியும் உன்ர திறமைக்கும் படிப்புக்கும் நல்ல எதிர்காலம் உண்டென்று. கடவுளாய்ப் பார்த்து உனக்கு ஒரு நல்ல வழியைக் காட்டியிருக்கிறார். இனிமேலாவது எங்கட கஷ்டமெல்லாம் தீரட்டும்."

படிப்பகம்

www.padippakam.com



அவன் சந்தோஷத்தில் திளைத்தான். ஆனால் ரஞ்சித்தின் முகத்திலிருந்த சந்தோஷக் களை மெல்ல மெல்லமாகக் குறைந்தது.

"---- அம்மா! நீங்கள் பெருமைப்படுவதில் நியாயமிருக்குது. ஆனால் ---- ஆனால் -- இதை என்னால் நிறைவேற்ற ஏலாது என்டு நினைக்கிறேன்.

"என்ன தம்பி சொல்லுறாய் --- ஏன் - என்ன நடந்தது."

"அம்மா! அங்கை படிக்கிறதென்டால் அது லேசுப்பட்ட காரியமில்லை. அதுக்கு எவ்வளவோ பணம் செலவாகும். அப்படியும் நான் படிக்கப் போனால் இந்தக் குடும்பத்தை ஆர் காப்பாற்றுவது? இப்ப நான் வேலைக்குப் போறதாலை தான் கொஞ்சமாவது காசு கிடைக்குது இந்த நிலையில நான் எப்பிடி ---- "

மேலும் தொடர அவனால் முடியவில்லை. கண்களில் நீர் ததும்பியது. இப்படியான ஒரு சந்தர்ப்பம் தனக்கு வராமலே இருந்திருக்கலாம் என அவனுக்குத் தோன்றியது.

"இனிமேல் இதைப்பற்றிக் கவலைப்படுவதில் பிரியோசனமில்லை. நான் தொடர்ந்தும் வேலைக்குத்தான் போகப் போறேன். என்னாலைதான் தொடர்ந்தும் படிக்கேலாமல் போச்சுது. ஆனால் தங்கச்சி இருக்கிறாள். அவள் எப்பிடியும் படிச்சு என்னைப் போலவே கம்பஸ்சுக்கு எடுபடுவாள். அவளை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வாறதுதான் என்ர நோக்கம்."

தாயின் கையில் அக் கடிதத்தைத் திணித்து விட்டு உள்ளே சென்றான். கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையிலுள்ள சந்தர்ப்பத்தை எண்ணி வருத்தப்பட்டாள் சரசு. இருந்தும் தன் குடும்ப நிலையை நினைத்த பொழுது அவளால் எதுவும் கூற முடியவில்லை.

*

தையல் மெஷின்கள் எழுப்பிய சத்தம் அந்தக் கடை முழுவதும் வியாபித்திருந்தது. மெஷினுடன் தானும் சேர்ந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான் ரஞ்சித். முதலாளி வருவதைக் கண்டதும் எழுந்து வாசல் பக்கமாகச் சென்றான்.

படிப்பகம்

www.padippakam.com


"என்ன தம்பி! வேலையெல்லாம் எப்பிடி நடக்குது?
கடையை ஒரு முறை நோட்டம் விட்டார் நாகலிங்கம்

"வாங்கோ முதலாளி! போன கிழமை வந்த ஓடர்கள் எல்லாம் இண்டைக்கு முடிஞ்சிடும்."

"நல்லது தம்பி மூர்த்தியையெல்லாம் இரண்டு மூண்டு கிழமை எண்டு இழுபடுகிறது. நீ வந்த பிறகுதான் இவ்வாறு கெதியில ஓடர்கள் முடிச்சாக் கிடக்கிறாய். உன்ர திறமைக்கு நீ இன்னும் முன்னுக்கு வர வாய்ப்பிருக்கு....... அது சரி நான் இப்ப வந்த விசயத்தை மறந்திட்டன். வேலை முடிஞ்சதும் நேர வீட்டுக்குப் போயிடாத தம்பி. பின்னேரம் நான் வீட்ட தான் நிற்பன். உன்னோட முக்கியமான விசயம் கதைக்க வேணும். அதுதான்... இங்கால வந்து பார்.... என்ன?"

ரஞ்சித்திற்கு மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தது அவரின் பேச்சுக்கள் - அது என்ன விடயமாக இருக்குமென்று அவனால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை.

வேலை முடிந்து மற்றவர்கள் எல்லோரும் சென்றுவிட்டனர். கடையின் பொறுப்பு முழுக்க ரஞ்சித்தில் மேல் சுமத்தப்பட்டிருந்ததால் கடையை மூடி விட்டு நேரே நாகலிங்கம் முதலாளி வீட்டுக்குச் சென்றான்.

*

ரஞ்சித்தின் வருகையை எதிர்பார்த்தபடியே இருந்தார் முதலாளி. அவனைக் கண்டதும் வீட்டினுள் கூட்டிச் சென்று உபசரித்தார்.

"ஏதோ விசயம் பேசவேணும் எண்டு சொன்னீங்க முதலாளி".

அவசரப்பட்டான் அவன்.

"ஏன் தம்பி அவசரப்படுகிறாய்... ஆறுதலாகச் சொல்லுறன். இதைப் அதுக்கு நீ சம்மதிக்க வேணுமெல்லோ.

புதிர் போட்டார் நாகலிங்கம் முதலாளி.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தவர் தன் மனதில் வைத்திருந்ததை வெளிப்படையாகவே கூறினார். இதைக் கேட்ட ரஞ்சித்தும் முதலில் மறுத்தான். ஆனாலும் அவரது வற்புறுத்தலால் அதற்குச் சம்மதித்தான் [தொடரும். ]

படிப்பகம்

www.padippakam.com

# அன்பான குயிலிக்கு!

நீயும் துப்பாக்கி சுடத் தெரிந்தவளோ ... ஐயத்தோடு உன்னைத் திறந்தேன் - இல்லை! நீ இலக்கிய ... அறிந்தவள்; மைகொட்டிச் சரித்திரம் படைக்கப் பிறந்த ... நிலைத்திடுவாய்! கற்புக் கோட்டை ... காலமறிந்து பயிர் விதைக்கின்றாய்! வாழ்த்துக்கள்

தேவன் HOLSTBRO

புத்தரையும் புஞ்சி ... வையும் எம்முன் நிறுத்திய குயிலியே! இலங்கையில் உனக்கு ARRIVAL கட்டுநாயக்கா இல்லை - பூசாதான்.

V. நஜா ÅRHUS

குயிலியே! உன்னை ... எப்படி என்று புரியவில்லை நன்றாக இருக்கிறது. புதுமையுடன் வெற்றி வருகிறாய்.

A. மாயவன் OLGOD

உன் வரவை ... ஓசை, என் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டே ... உன் ... பிரசவத்தின் போது ... உன் வரவை எண்ணி உவகையுடன் காத்தும் ... நானும் ... எமது நாட்டின் தலைசிறந்த ... இந்நாட்டிலும் ஊக்குவிப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

திருச்செல்வன். NÆSTVED

குயிலி தொடர்ந்தும் கூவிக் ... கொண்டே இருக்க வேண்டும் என்பது என் விருப்பம் மட்டுமல்ல. ÅLBORG வாழ் அனைவரதும் விருப்பமாகும்.

M. யோ... ... ÅLBORG

நீங்கள் அனுப்பிய பத்துக் குயில்களும் பறந்து வந்து என் கைகளில் இருந்தன. அவைகளை ... தமிழ் அன்னைக்கு முத்தமிழ்வதை போன்ற ... அடைந்தேன். இக் குயிலோசையை ஒலிபரப்பும் ஓர் அலைவரிசையாக இருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தவயோகன். NÆSTVED

"சக்கரைப் பந்தலில் தேன்மழை பொழியுது - - - - -! என்ன மொழிக்கிறீர்? - - - - சக்கரைப் பந்தலான உனது கூவலில் திருவாளர் பாலமனோகரனின் சிறுகதையும், திருவிளையாடல் காட்சியும் தேன் மழை பொழிந்தது. இப் புனிதப்பணி மேலும் வளர வாழ்த்துகிறேன்.

"ஜென்னி. FARUM.

படிப்பகம்

www.padippakam.com



போற்றிடுவேன் நீ தெய்வமம்மா! -அக்சி NYBORG

ஆசைக் கொடு மகனாய் அன்னை எனை ஈன்றெடுத்தாய்
மாசற்ற அன்புடனே மடியினிலே தாலாட்டி
பாசமென்பதனைப் பாங்குடனே எனக்கூட்டி
பேசவைத்தென்னைப் பெரியவனாக்கி விட்டாய்

பள்ளிக்கு நான் சென்று பாடங்கள் பயின்ற காலை
புள்ளிகள் நிறையப் பெற்று புனிதனாய் வீடு வந்தால்
அள்ளியே எனை அணைத்து அன்பு முத்தம் தனை ஈந்து
துள்ளிய நாட்களோ துவழவில்லை இன்றுவரை

அறுசுவை உணவுகளை அழகாய்ச் சமைத்திடுவாய்
நறுமணம் கமழ நான் நன்றாகச் சுவைத்தேனே - இங்கே
இங்கில உணவை நான் அருந்திடப்படும் துயரம்
ஏங்கிடும் உனக்கு நான் எவ்விதம் எடுத்துரைப்பேன்

பாரினிலே பூத்த சுகம் பஞ்சணையில் இல்லையம்மா
தீயிலே வெந்தது போல் தினமும் உன் நினைவணங்கி
கோவிலே! குலவிளக்கே! என் முன் வந்திடம்மா.
நீயில்லையேல் எனக்கு ஏதம்மா நிம்மதி.

அம்மா என்று சொன்னால் ஒரு ஆத்மதிருப்திதான்
அம்மா எது சொடுக்கினாலும் அங்கேயும் அம்மாதான்
சுகத்தில் நாம் திளைக்கும் போது அங்கேயும் அம்மா
சோக வேதனையில் துடிக்கும் போது அங்கேயும் அம்மா.

எத்தனை குறும்புகளை எவ்விதம் நான் செய்தாலும்
அத்தனையும் நீ தாங்கி அன்பாய் அணைத்திடுவாய்
நித்தம் உன் சேவைக்கு நிகரேதும் இல்லையே
மெத்தச் சொல்வானேன் மேதினியில் நீ தெய்வமம்மா.

படிப்பகம்

www.padippakam.com

# சுவாசம் கிடைக்காத சின்னப்பயல்

— விஜே —

மகனே!
நீ எங்கே இருக்கிறாய்?
பாலூட்டி வளர்த்தவள் - இன்று
பாயில் துடிக்கிறாள்!

பாலும் தொண்டையால் இறங்குதில்லை
படுக்கைப் புண்ணும் முதுகெங்கும் மிச்சமில்லை
ஆனால்
ஆவி மட்டும் பிரியுதில்லை
ஆசை மகனே உன்னை நினைந்து
மருந்துக்கோ கிடையில்லை
மகனே வந்திடடா

அன்று காலை
அவள் கையால்
[illegible] தின்ற தோசையும்
[illegible] சம்பலும்தானா
கடைசி
அதன் பின் எங்கே போனாய்?
அன்று படித்தவன் தான் [illegible]

ஆவி [illegible] அள்ளிப் போன
அப்பாவின் [illegible] நீயும் [illegible]
அன்று
செல் [illegible] சென்றார் [illegible] நீயும் ஒருவனா?

இடிமுழக்கம் கேட்டும்
இடியன் காரர்க்காக [illegible] விழித்திருக்கிறாயா?
அன்றி
இயக்கங்களின் மோதலில்
இனமொழிப்பட்டு உன்னை நாம் இழந்துவிட்டோமா?

எங்கிருந்தாலும்
பதில் ஒன்று தாடா
பாவியவள் படுக்கையிலே....

www.padippakam.com


# Amtssygehuset

| | |
|---|---|
| முழுப் பெயர் : நாகலிங்கம் சற்குணநாதன். | |
| பால் ஆண் [X] பெண் [ ] | வயது : 36 |
| இனம் : இலங்கைத் தமிழ் | திருமணமானவரா ஆம் [ ] இல்லை [X] |
| இலங்கை விலாசம் : அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. | |

திரு. நாகலிங்கம் சற்குணநாதன் அவர்கள் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு பேசும் திறனும் அற்று DIANALUND மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து வந்த எம் சக சகோதரர் ஒருவருக்கு இவ்வாறு நிகழ்ந்தது துர்ப்பாக்கியமே.

இதை அறிந்த பொழுது மனத்தில் எங்கோ ஒரு மூலையில் வேதனை உணர்வு தோன்றியது. அவரைப் பற்றி மேலும் அறிந்து ஏதோ விதத்தில் அவருக்கு எம்மால் உதவ முடியுமா என்ற ஆதங்கத்தில் எமது DIANALUND விநியோகிப்பாளர் திரு. விக்னேஸ்வரனுடன் தொடர்பு கொண்ட பொழுது அவர் தெரிவித்த தகவல்கள் மேலும் அதிர்ச்சி தருவதாயிற்று. அவர் கூறியதாவது:

"31-12-86 அன்று இரவு சற்குணநாதனைப் பார்வையிட்ட டாக்டர், "மது போதையில் இருக்கிறார். காலையில் சரியாகிவிடும்" எனக் கூறினார். ஆனால் அதிகாலை மூன்று மணியளவில் அவர் இரத்தம் இரத்தமாக வாந்தி எடுத்தார். 1-1-87 புதுவருட விடுமுறை தினமாக இருந்த போதும் இங்குள்ள தமிழர்களின் முயற்சியால் எமது அலுவலக உத்தியோகத்தருடன் சிரமப்பட்டுத் தொடர்பு கொண்டு அவர் மேலும் வேறு ஒரு டாக்டரை அழைத்து சற்குணநாதனை மருத்துவமனையில் அனுமதித்தோம்.

முதலில் வந்து பார்த்துச் சென்ற டாக்டர் மேல் எமது மேலிடம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் விபரம் 'SJÆLLANDS TIDENDE' என்னும் பத்திரிகையில் 9-1-86 அன்று வெளியாகியது

*

விதி விரட்டியடிப்பது என்பது இதுதானா?

*

அவரின் உடல்நலனுக்காக இளவாலை சார்பாக அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் 100Kr. பணத்தையும் அனுப்பி வைக்கின்றோம். வாசகர்களே நீங்கள் அனுதாபத்தையோ அன்றி உதவியையோ அளிக்க விரும்பின் அவரின் விலாசம் 59ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# உண்மை உறவுகள்

ஒரு மாதத்தின் முன்தான் அன்னத்தின் மூத்தமகள் ராணி பெரியவளாகி இருந்தாள்.

அண்டை அயல்கள் கொண்டு வந்த நல்லெண்ணெயிலும் உழுத்தம்மாவிலும், முட்டையிலும், இரண்டு ரின்கள் நிறைய முட்டைமா செய்தது போக எஞ்சியிருந்த முட்டைகள் பங்குனி வெய்யிலில் பழுதாகிப் போகும் என்பதற்காக பக்கத்து வீட்டுப் பூரணத்திடம் இருந்த அடைக் கோழியை வாங்கி இஞ்சை வைத்ததில் தேறியவை ஏழு.

காகம் தூக்கியது, பூனை பிடித்தது கிணற்றுள் விழுந்தது ...... என விசாரணை முடித்துக் கொண்டதால் எஞ்சியவை மூன்று. அதிலும் அடைக்கோழி அக்கிரிமென்ரின்படி பூரணத்துக்கு ஒன்று போக தேறியவை இரண்டு.

✯

"அம்மா! இஞ்சை பார்த்தியளோ...... எப்பவும் இதுகள் ஒண்டாய்த் திரியுதுகள்?"

"ஓமடி மின்னி...... ஒண்டாய் அடைவச்சதுகள் ஒண்டாய் இரை தேடுதுகள்."

"ஒரு மாதக் குஞ்சுகள் எண்டாலும் நல்லாய் செட்டை முளைச்சிட்டுது."

✯

வீட்டின் தாழ்வாரம், பாவட்டை நிழல்கள், கிணற்றடி வாய்க்கால் எங்குமே கறுவலதும் சிவப்பியினதும் அதிக்கம்தான்.

நிலம் வெளுக்க இறங்கி வருவது தொடக்கம், சூரியன் படுத்துச் செக்கல் வரும் வரை

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றாகவே திரியும்.

எங்காவது காகம், பருந்தைக் கண்டால்தான் கீச்சிட்டுக் கொண்டு ஓடி மறையுங்கள்.

அப்படி ஒரு உறவு அவைகளிடையே.

*

இருந்தாற் போல் எங்கிருந்தோ வந்த மழையால் ஊரே பொறுமையிழந்து நச்சரித்துக் கொண்டிருந்தது.

"இந்தக் காத்தும் மழையும் எப்ப விடப்போகுது?"

"ஒரு காய்கறி சாமான் கூட வாங்கேலாமல் கிடக்குது"

"வெங்காயம் இனி எழும்புமெண்டு நினைக்கேல்லை?

"கடைக்காரச் சீனியர் வீட்டுச் சுவரும் விழுந்திட்டுதாம்

கறுப்பியும் சிவப்பியும் 3 நாளாய்க் குளிரில் நடுங்கிக் கொண்டு தாழ்வாரத்திலேயே நின்றன. அன்னம்மா கூட அவை செத்துவிட்டனவோ இருக்கின்றனவோ என்று கவலைப்படவோ அன்றி அவற்றைத் தேடிப்பார்க்கவோ இல்லை.

நாலாம் நாள் சிவப்பி பசியால் முனகியது. கறுவலுக்கு ரொம்ப பாவமாகப் பட்டது அந்த முனகல்.

சிறிது நேரம் சிவப்பியைப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு மெதுவாக கால்கள் மறையும் தண்ணீரில் இறங்கி அப்படிக் இந்தப்பக்கமாகப் போனது.

அப்போதான் அன்னம் ஒழுங்கை முகரியில் காவல் காத்து சைக்கிள்க்காரனிடம் நாலைஞ்சு கீரிக் குஞ்சு வாங்கி வைத்திருந்தாள். அந்தக் குளிரில் சந்தைக்குக் கூடப் போக முடியவில்லை.

"பிள்ளை..... ஒரு தேத்தண்ணி வை..... சீலை நனைஞ்சு போச்சு..... மாத்திக்கொண்டு மீன் நோண்ட வேணும். கொய்யா வரப்போறார்."

உமலைக் திந்தில் வைத்துவிட்டு அன்னம் சேலை மாற்றப் போக எட்டநின்று பார்த்துக் கொண்டிருந்த கறுவல் "லபக்" என்று ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடியது.

படிப்பகம்

www.padippakam.com



"சனியன் ஒரு மீனைக் கொண்டு ஓடுது"
பக்கத்தில் இருந்த திருவலையைத் தூக்கி கருவலுக்கு எறிந்தான்

நல்ல வேளை அடிபடவில்லை.

"எடியேய்..... நீ உதில நான் சொன்னா உடனே தேத்தண்ணி வைக்கப் போயிருந்தால் உது வந்து மீனைத் தூக்குமே...... ஒரு கண்டறியாத கதைப்புத்தகம் ஒண்டு....."

"அம்மா கத்தாதையணை".

"ஓம்.... இப்ப நான் கத்திறமாதிரித்தான் இருக்கும்"

புறுபுறுப்பு செயவில்லை.

கருவல் வெகு உற்சாகத்துடன் சிவப்பிக்கு முன்னால் மீனைக் கொண்டுவந்து போட்டது.

சிவப்பி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு கொத்திக் கொத்திச் சாப்பிட கருவல் பார்த்துக் கொண்டு நின்றது.

இரண்டு மூன்று தடவை மீனைக் கொத்திய சிவப்பி என்ன நினைத்ததோ கருவலுக்குக் கிட்டவாக மீனைப்போட்டது.

கருவல் பேசாமல் நின்றது
சிவப்பி இன்னும் கிட்டவாக இழுத்துப் போட்டது.
இப்போ கருவலுக்கும் புரிந்தது.
இரண்டும் பின் கொத்திக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன

☆

பிள்ளையை ஒரு மாசம் அல்லது இரண்டு மாசம்தான் பள்ளிக்கூடத்தாலே மறிச்சு வைக்கிறது.....நீதான் பெரிய பிள்ளை வளர்க்கிறது போலை அவளை ஆறுமாதமாய் வீட்டுக்க வைச்சிருந்திட்டாய்..... இனி அவள் போகட்டும். ஏதோ உன்ர பிள்ளைதான் ஊரிலை பெரிசாகினது போல

☆

இந்த ஆறுமாதத்துள் அழகாய் மாறியது அன்னத்தின் மகள் ராணி மட்டுமில்லை. கூடவே கருவலும் சிவப்பியும் தான்.

படிப்பகம்

www.padippakam.com



கறுவலுக்கு தலையில் சிவந்த கொண்டை துளிர்க்கத் தொடங்கியது.

சிவப்பியும் செட்டைகள் பரந்து கொழு கொழு என்றிருந்தது.

அன்று காலை இரைச் சேவல்கள் கூடியபோது கறுவலும் தன்னைத் தான் மறந்து ஏதோ ஒரு உந்துதலில் தாளமாம் செட்டையை அடித்துக் கொண்டு கூவியது.

சிவப்பி சிலிர்த்துக் கொண்டது.

கறுவலுக்கு அதுவே ஒரு பெருமையாகப்பட மீண்டும் மீண்டும் செட்டையை அடித்துக் கூவியது.

சிவப்பி தலையைத் தாழ்த்திக் கொண்டது

நாணமோ?

அன்று முழுவதும் ஏனோ சிவப்பி வெட்கப்பட்டது போல தயங்கி தயங்கி நத்தி நத்தியே கறுவலுக்குப் பின்னால் திரிந்தது.

அன்று செக்கல் நெருங்கிக் கொண்டிருந்த வேளை பக்கத்து வீட்டுப் பூரணத்தின் வெள்ளையன் சிவப்பியைக் கண்டவுடன் சிலிர்த்துக் கூவிவிட்டு சிவப்பியைக் கலைத்துக் கொண்டு வந்தது.

சிவப்பிக்குப் பயம் தோன்றிவிட கதறிக் கொண்டு கறுவலுடன் ஒட்டிவிட்டது.

கறுவலின் ஆண்மை விழித்துக் கொண்டது.

சிலிர்த்துக் கொண்டு பூரணம் வீட்டு வெள்ளையன் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கியது.

இரண்டிற்கும் சண்டை மூண்டு விட்டது. பின்னால் செல்வதும் பின் சிலிர்த்து முன்னால் வந்து பாய்ந்து தாக்கத் தொடங்கின.

இரண்டிற்கும் கீழ்த் தாடையில் இரத்தம் வழிந்தது.

படிப்பகம்

www.padippakam.com

சிவப்பி பயந்து நடுங்கியது.

அப்போ வெளிப்பக்கம் குப்பை கொட்ட வந்த அன்னம் கையிலிருந்த கடகத்தால் எறிந்து வெள்ளடையனைக் கலைத்துவிட்டுப் போனாள்.

"சனியனுகள்.... கொழுப்பு மெத்திப் போய்த் திரியுதுகள்".

கறுவலுக்குத் தாடையில் சிறிது இரத்தம்.

சிவப்பிக்கு அடிவயிற்றை வருத்தியது

தன் அலகால் அதை மெதுவாகத் துடைத்துப் பின் தன் செட்டையில் அலகைத் துடைத்தது.

கறுவலுக்கு அது ஓர் இன்பானுபவமாகப் பட்டது.

*

இரவு வீடே அமர்க்களப்பட்டது.

"பச்சை உடம்பு காயமுதல் பேயாசி இப்பிடிச் செய்தாளோ" என ஊர் வாயில் கைவைக்க முன்பே "பாவம் பிள்ளைக்குத் தொண்டைச் சன்னி கண்டுட்டுது" என அனுதாபப்பட வைத்தது அன்னத்தின் கெட்டித்தனம் தான்.

வயிற்றில் வாங்கிவந்ததை வாய் வழியே அழித்துவிட்டாலும் உடல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அவசரப்பட்டு முந்தானை விரித்ததன் பலன் ராணி முனகிக் கொண்டு இயக்கமற்றுக் கிடந்தாள்.

"எதுக்கும் அன்னம் ------ சன்னிக்குக் கை வைத்தியம் பாராமல் வைத்தியரிட்டைக் கொண்டுபோய்க் காட்டு".

*

அடுத்த நாள் நிலம் வெளுத்தபோது முதல்நாள் காயப்பட்ட நோ அனைத்தையும் மறந்து கறுவல் கம்பீரமாகக் கூவியது.

சிவப்பி கறுவலின் தாடையைப் பார்த்தது

இரத்தம் காய்ந்திருந்தது.

கறுவலின் தாடையை சிவப்பி தன் அலகால் தடவியது.

கறுவலும் ஓர் உற்சாகத்துடன் செல்லமாகச் சிவப்பியைத் தன் அலகால் கொத்தியது.

சிவப்பிக்கு உடல் சிலிர்த்தது.

அதுவும் திரும்பக் கொத்தியது.

மாறி மாறிக் கொத்திக் கொண்டிருந்தபோது கறுவல் தன் சிறகால் சிவப்பிக்கு அடித்தது.

படிப்பகம்

www.padippakam.com



சிவப்பி புரிந்து கொண்டது.

ஊடலோ.... அன்றி.... கூடலுக்கான அழைப்போ....

சிவப்பி தாழ்வாரத்தில் நின்று குதித்து ஓடியது.

கறுவல் கலைத்தது.

கிட்ட நிற்பதும், பின் கறுவல் வர ஓடுவதாயும் சிவப்பி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. அதைக் கறுவலோ சகிக்கவில்லை. ரொம்ப உற்சாகமாக இருந்தது.

மாறிமாறிக் கலைத்துக் கொண்டு ஓடி.... ஒரு பாலு-ட்டை பற்றையின் நெருக்கத்தில் கறுவல் தன் அலகினால் சிவப்பியைப் பிடித்துக் கொண்டது.

நாணத்தில் எழுந்த திமிறல்....

அதை எதிர்க்கும் பெண்மை....

சிறிது நேரப் போராட்டத்தில் தன்னைக் கறுவ-லுக்குக் கொடுத்து கறுவலின் ஆளுமையில் அடங்கிக் கிடந்-தது.

அந்தக் காதல் பொழுது கறுவலுக்கும் சிவப்பிக்கும் ஒரு காவியத்தையே சமைத்தது.

★

"காலமையே வைத்தியரிட்ட போய் வந்தது நல்லதாய்ப் போச்சு.... பிள்ளையைச் சாப்பாட்டாலதான் தேற்ற வேணு-மாம்."

"என்னடி சொன்னவர்"

"கூடாத சேவலும் கன்னிப் பேடும் தான் நல்லது."

"இப்ப கோழி விக்கிற விலையில எங்க போகப் போறம்.... இப்ப பிரச்சனையால பிறந்தமடச் சந்தையும் அவ்வளவு கூடுறேல்ல"

"உந்தக் கறுவல் இப்ப இரண்டு நாளாய்த்தானே கூவுது... கொக்கரிக்குது அத்தோட சிவப்பியும் காலம தொடக்கம் முட்டை போடப் போகுதோ...."

"அன்னம் முட்டை போடுற கோழியெண்டால் அது இறக்கட்டும் இப்ப இன்னைக்கு கறுவலைப் பிடிப்பம். பிறகு நாளைக்கு ஊருக்கை வாங்கிறம்.... என்ன செய்யுறது."

"பொறுங்கோ இங்க இரண்டுபேரும் ஜோடியாயிருக்கினம். அரிசியைக் கொஞ்சம் எடுபிள்ளை...... கறுவலைப்

படிப்பகம்

www.padippakam.com



பிடிப்பம்.---- சிவப்பியை முட்டைக்குள்
அடைப்பம்---"

"பா--- பா---- பா----"

அன்னம் பாசக்கயிற்றை வீசினள்.
ஆமி அவரை இரண்டும் கதறின.

☆

சுதந்திரமாகக் காரு
வுடன் உலாவிய சிவப்பிக்கு
அந்தக் கூடகத்துள் பூட்டப்பட்டு
இருந்தபோது உலகமே இருண்டு
போயிற்று.

"காருவா..... எங்கே போயிட்டாய்..
வேதனையில் துடித்தது.
காருவா --- எங்கே போயிட்டாய்...

அப்போதான் அடி
வயிற்றில் நோ தொட்டது.

காலையில் காருவுடன் கலந்த
அந்தச் சுகானுபவத்தில் ஏற்ப-
டப் போகும் அந்தத் தலைப்பிரசவ
வேதனை...

வெளியே காருவுடன் இருந்திரு-
ந்தால் அதையெண்ணி மகிழ்ந்தி-
ருக்கும் சிவப்பி.....

இப்போ....??

"காருவா வயிற்றுள் நோகுதே...
நீ எங்கு போய்விட்டாய்...

☆

அம்மிக் குழவியுடன் கால் கட்டி
வைக்கப்பட்டிருக்கும் காருவல்
சிவப்பியை சுற்றுமுற்றும் தேடியது.

"சிவப்பி..... எங்கை நீ....
பறந்து தப்பப் பார்த்தது. அதையும்...

## சிரிப்புக்கு விளக்கம்

:-)

-T. சிசுரூபன்-
NÆSTVED

அன்பால் சிரிப்பவள்
அன்னை
வெற்றியில் சிரிப்பவன்
வீரன்
உருகிச் சிரிப்பவன் ஆண்டி.
கோபத்தில் சிரிப்பவர்
சிந்தனைவாதி
நிதானமாகச் சிரிப்பவர்
அறிஞன்
நிலை மறந்து சிரிப்பவன்
காதலன்
இன்பத்தில் சிரிப்பவன்
ஏமாளி
கண் பார்த்துச் சிரிப்பவன்
காரியவாதி.
தற்பெருமையால் சிரிப்பவன்
கோழை
கொடுக்கும் போது சிரிப்பவன்
சூழ்ச்சிக்காரன்

வெற்றுக்கு மேல்....
துன்பத்தில் சிரிப்பவனே மனிதன்

☆

## இயலாமை %

வண்ணச் சிறகடித்து
விண்ணில் பறக்கத் துடிக்கும்
என் ஆசைக் கனவுகள்
தினமும்
என்னைக் கோட்டைக்குள்
மௌன விரதம்
அனுஷ்டிப்பதேன்?

— அலென் அலோசியஸ்
HERNING —

படிப்பகம்

www.padippakam.com


அம்மியின் கனமும் அன்னத்தின் கட்டும் அதைய விடவில்லை.
தன் சக்தியையெல்லாம் சேர்த்துப் பெரிதாகக் கூவியது.
சிவப்பியால் பதிலாக பெரிதாகக் கூவ முடியவில்லை. அவ்வளவு
வலி... அதைப் முக்கி முனகியது.... அதாவது கறுவனுக்குக்
கேட்காதா என்ற ஆதங்கத்தில்....
ஆனால் அது கறுவனுக்குக் கேட்கவில்லை.

☆

"மாணிக்கம்!.... உந்த அம்மியோட கட்டியிருக்கிறது தான். அடி
வளவுக்குகை கொண்டு போ. நான் சட்டியும் தண்ணியும் கொண்டு
வாறன்"
மாணிக்கம் செட்டையில் பிடித்துத் தூக்கினான்.
கறுவல் கதறியது.
அந்தக் கதறல் கறுவனுக்கு ஆபத்து என்பதை மட்டும் சிவப்பி
புரிந்துகொண்டது. ஆவி துடித்தது. வயிற்றிலும் வேதனை கூடி
விட்டது.
"கறுவா.... உனக்கென்ன நடந்தது...."
சிவப்பி.... என்னைக் கொல்லப்போறாங்கள்....
வேப்ப மரத்தடியில் கட்டியிருந்த உரலுதடத்தில் கறுப்பியின்
கழுத்தை வைத்து.......
"சிவப்பி நீ எங்கே...."
மாணிக்கம் கயிற்றை இறுக்கிவி-
-ட்டான்.
கறுவல் மரணவேதனையில் அலறித்துடித்தது.
செட்டையைப் பலமாக அடித்தது.
சிவப்பியால் தாங்க முடியவில்லை.
கடகத்தினுள் இருந்தவாறு கத்தியது.
வயிற்றில் நோ தாக்கியது.
"கறுவா! உன்னை என்ன செய்கிறார்கள்....?"
இரண்டுக்கும் ஜீவ மரணப் போராட்டம்.
சிறித நேரத்தில் வேப்பமர கயிற்றின் ஆட்டம் ஓய்ந்திருந்தது.
அங்கே மனிதவிருந்திற்கு கறுவல் தயாராகிக் கொண்டிருந்தது.

☆

"இதை பாத்தியளோ அப்பா.... காலம கொக்கரிக்குது என்றிட்டு
அடைச்சு வைச்சனான்..... இப்ப செத்துப்போய்க் கிடக்குது...
ஏதும் பாம்பு கீம்பு கடிச்சுதோ தெரியேல்லை"

[யாவும் கற்பனை?]

☆

படிப்பகம்

www.padippakam.com

# பேனாக்கள் பேசுகின்றன

T. S. லிங்கம், SVENBORG

(1) கேள்வி பதிலில் ஏன் இவ்வளவு குதர்க்கம்?

ஆசிரியருரையில் ஏன் இவ்வளவு நிதானம்!.

2 செல்வி, HERNNING

நிலக் கிளியைப் பிடித்துவந்து எம் இருளை அகற்றியது உங்கள் சாதனையில் மைல்கல் என்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அத்தோடு நின்றுவிடவில்லை; முல்லையும் மணக்கின்றது. ஆதவனும் உதிப்பான்; அரும்புகளும் மலராகும்.

3 ஈஸ்வரன், FREDERIKSHAVN

"பொங்கியது" சிறுகதை எழுதிய மீராவே உனக்கும் RED CROSS CAMP இல் பொக்கிளிப்பான் வந்ததா?

எயிட்ஸ் ஒன்றுதான் வரவில்லை.

4 M. யோகேஸ்வரன், ÅLBORG

ORE கணக்குக் காட்டினீர்களே. உங்களை நாம் நம்ப மாட்டோமா?

நன்றி. நாணயம் இருக்க வேண்டுமென்றால் இவ நம்பிக்கையீனக் கூட ரெஜிஸ்டர் பண்ணத்தான் வேண்டும். Just சீதனக்காசை இவளின் பெயரிலும் வங்கிக் கணக்கில் வைப்பில் இடுவது போல.

படிப்பகம்

www.padippakam.com



A. அன்ரன்ராஜ் SVENBORG
குயிலி நீ அறியும் நடக்கும் சம்பவங்களை தலையங்கத்துடன் நிறுத்துவானேன்? (கூவல் 3. பக்கம் 4.)
இது சஞ்சிகையே தவிர செய்தித்தாள் அல்ல. மேலும் எந்தச் செயற்றிலும் எங்கேயாவது ஒரு கீறல் கிடக்கத்தான் செய்யும். அக் கீறல்கள் களையப்பட வேண்டும் என்ற பொது நோக்கமே தவிர அக் கீறல்களை விரிவுபடுத்திப் பிளவுகளாக்கிக் காட்டக் குயிலி விரும்பவில்லை.

M. சேகரன் ROSKILDE
குயில்கள் என்றால் விருப்பமா?
ஆனால்.... குருவிகள் என்றால் பயம்.

பகவான் VIBORG
இந்த நாட்டுக்கு வந்தபோது உங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது எது? கவலையைக் கொடுத்தது எது?
சந்தோஷத்தை இதுவரை இங்கு எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் கவலையைக் கொடுத்த இடயம்; வவுனியா, இந்தியா இலங்கை, என்று இங்கு camp இல் ஈழம் பிளவுபட்டது.

ராஜதேவன், FÅBORG
குயிலியில் காதல் கொண்டு என் பேனைவுக்குச் சிறகு முளைத்த போது கூவல் மூன்றின் வளர்ச்சி என்னைப் பயப்படுத்தி விட்டது. எம் போன்ற வளரும் எழுத்தாளர்களை ஆதரிப்பீர்களா?
நிச்சயமாக! வளர்ந்தவர்களை வரவேற்பது மட்டும் எம் பணியல்ல! வளரத் துடிக்கும் உள்ளங்களை வளர்த்தெடுப்பதும் தான்.
(இது ஒன்றும் இலங்கை வானொலி நடிகர் குழு அல்ல)

பழி, HUNDIGE
டென்மார்க்கில் வாழும் மக்களிடம் உங்களைக் கவர்ந்தது எது?
HUNDIGE STATION இல் என் சைக்கிளை யாரோ கவர்ந்து சென்றுவிட்டார்கள். வயிறு எரிகிறது. வாயைக் கிளறாதையும்.

V. N. ராஜ். ÅRHUS
நீங்கள் யார் மீதும் பொறாமைப்பட்டதுண்டா?
உண்டு; அங்கு அறுவடை பெய்கின்ற பருவங்கள் இங்கு ஐஸ் கிறீம் குடிப்பதைப் பார்த்து.

முன் அட்டைப் படத்தை வரைந்தவர் திரு சிவா. HOLSTEBRO
- 47 ம் பக்க ஓவியம் திரு ஜெயந்தா. HOLSTEBRO.

படிப்பகம்

www.padippakam.com



11 சந்திரன், GRINSTED

உங்கள் அச்சகத்தில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள்?

"..... மன்னரும் நானே ..... மக்களும் நானே .... மரம் செடி கொடிகளும் நானே ....." இவ்வாறு கண்ணபரமாத்மா பகவத் கீதையில் கூறுகின்றார். அவ்வாறே..... "ஆசிரியரும் நானே.. ஆபீஸ் பையனும் நானே.... அச்சடிப்பவனும் நானே.... இப்படியாக டிமிக்கி விடும் காலத்திலே ...... திமிக்கிட திமிக்கிட...

12 J.A.S. பிறேமராஜா, BALLERUP

ஏறக்கற அடிப்பது உண்டா?

உதுகள் தானே வேண்டாம் என்கிறது — சும்மா PUBLIC இல்

13 சுமதி - ROSKILDE

இலங்கையில் நிலவும் பொருளாதாரத் தடை பற்றி..

அரசு தரப்பின் நாகாஸ்திரம்.

14 விவேக் NYKOBING F

எட்டப்பா! பொங்கியது சிறுகதையில் "பொங்கலுக்கு டென்மார்க்கிலிருந்து காசு அனுப்பப்பட்டதாக காட்டப்பட்டிருந்தது"! எமது நாட்டின் வறுமையை இங்குள்ளோருக்குக் காட்டிக் கொடுக்கலாமா?

அமைதியாய் இருங்கள் மன்னவா! நான் இதை எழுதியிருக்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் அப்பிளும் ஆரஞ்சும் பூத்துக் குலுங்கி செல்வத்தைக் கொட்டுவதாகவா நினைக்கப் போகிறார்கள் - நம்ம பசாரைப் பற்றி அனைவருக்கும் தெரியும். எதற்கும் 000 என்ற இலக்கத்தை நினைவில் வைத்திருங்கள். காரணம் உங்கள் இரத்தக் கொதிப்புக்கு அரண்மனை வைத்தியர் உடனடியாக வராவிடில் இந்த இலக்கம் உதவும்.




48ம் பக்கத் தொடர்ச்சி:

MR. NAGALINGAM SATKUNANATHAN
STUE 8
KOLONIEN FILADELFIA
4293 DIANALUND
DANMARK.

படிப்பகம்

www.padippakam.com

EDITOR: MEERA
PLANTAGEVEJ 2
2670 GREVESTRAND
HUNDIGE
DENMARK

PUBLISHERS: D-F-H
ROSKILDE
DENMARK

படிப்பகம்